-58

தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

மலர் 5 | சென்னை | 9-8-58 | சனிக்கிழமை | இதழ் 8

AGENT MANI & Co. SHEVAPET.

டிட்டோவும் நாசரும்

தில்லை. மறைமுதல்வன் எம். ஏ., பி. எல்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் நடைபெற்ற பிரெஞ்சுப் புரட்சி இரு வலிமை வாய்ந்த இயக்கங்களுக்கு வித்திட்டுச் சென்றது. ஒன்று ஜனநாயகக் கிளர்ச்சி, மற்றது தேசியப் போராட்டம்.

அன்றிலிருந்து இன்றுவரை ஜனநாயகமும் தேசியமும் பல 'திக்குளி'களுக்கு ஆளாகியிருக்கின்றன. எனினும் அவைகளின் வலிவும் பொலிவும் குன்றக் காணோம். இன்றும் அவை உயிருள்ள தத்துவங்களாக - வளர்கின்ற இலட்சியங்களாக காட்சியளிக்கின்றன.

சுதந்திர வேட்கை கொண்ட மக்கள் தேசியப் பிரிவுகளாகப் பிரிந்து அதன் அடிப்படையில் நாடுகள் அமைத்துக்கொண்ட போது மார்க்சியவாதிகளும், வல்லரசு வெறியர்களும் தேசிய உணர்ச்சிக்கு எதிராக பல புதிய தத்துவங்களைக் காட்டினர். அந்தத் தத்துவங்கள் ஒவ்வொன்றாக தகர்ந்து வீழ்வதை இன்று உலகம் 'வேடிக்கை' பார்க்கிறது. முதலாளித்துவம் பொதுஉடமை ஆகிய இயக்கங்களைவிட தேசிய இயக்கமே பெரிது என்ற உண்மை இன்று சரித்திரத்தின் பக்கங்களில் பதிவாகிக் கொண்டிருக்கிறது. நாட்டுப் பற்று மிகுந்த மக்களின் விடுதலை கீதந்தான் இன்று வான வெளியை நிறைத்துக் கொண்டிருக்கிறது.

''எங்கள் நாடு தனிநாடு. அதை ஆளும் உரிமையும் எமக்கே சொந்தம். சின்னஞ்சிறு நாடானாலும் அதுவே எமக்கு பொன்னாடு. அன்னியர் ஆளுகையைச் சகியோம், அடிபணியோம்'' என்ற உரிமை உணர்ச்சி இன்று உலகின் பல பகுதிகளிலும் அரும்பியிருக்கிறது.

தளையுடைத்த நாடுகளின் குரலில் புதிய தெம்பும் பொலிவும் கேட்கின்றன. அதுகேட்டு மாபெரும் வல்லரசுகளும் மருட்சியால் தத்தளிக்கின்றன.

தேசிய உணர்ச்சியின் அற்புதமான சக்தியை உலகிற்கு எடுத்துக் காட்டுவதுபோல அண்மையில் ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கிறது. யூகோஸ்லோவியத் தலைவன் டிட்டோவும், எகிப்து நாட்டுத் தலைவன் நாசரும் சந்தித்த நிகழ்ச்சி அரசியல் வாதிகளின் கவனத்தை பெரிதும் கவரக்கூடியதாகும்.

பிரியோனித் தீவில் சந்தித்த நாசரும், டிட்டோவும் உலக அரசியல் பிரச்சினைகள் பலவற்றையும் பற்றி பேசியிருக்கிறார்கள். சைப்ரஸ் தீவில் நடக்கும் விடுதலைப் போராட்டம்பற்றி, அல்ஜீரியாவின் உரிமைக் கிளர்ச்சிபற்றி, லெபனானின் அரசியல் நிலைபற்றி கலந்து பேசியிருக்கிறார்கள்.

பேச்சு வார்த்தைகளுக்குப் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் அன்னிய ஆதிக்க வெறியை எதிர்த்தும், ஒரு நாடு மற்றொரு நாட்டின் விவகாரங்களில் தலையிடுவதைக் கண்டித்தும், அணு ஆயுத உற்பத்தியை தடை செய்யாவிட்டால ஏற்படக்கூடிய தீங்குகளை எடுத்துக் காட்டியும், இன்றைய உலகம் இரு பிரிவாகப் பிரிந்து ஒன்றை ஒன்று அழித்துக்கொள்ள சமயம் பார்க்கும் பயங்கரத்தைச் சுட்டிக் காட்டியும் வாசகங்கள் காணப்படுகின்றன.

இதை எல்லாவற்றையும்விட முக்கியமானது-இருவரும் அவ்வப்போது சந்தித்து, பொதுப் பிரச்சினைகள்பற்றி விவாதித்து ஒத்துழைப்பது-என்று செய்து கொண்ட முடிவாகும்!

டிட்டோவும், நாசரும் சந்தித்ததும், ஒத்த கருத்துக்களை தெரிவித்ததும் பலரை பெரிதும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியிருக்கின்றன! பெல்கிரேடும், கெய்ரோவும் கைகுலுக்கிக் கொண்டதில் அப்படி என்னதான் விந்தை இருக்கிறது? இந்தக் கேள்வியின் பதிலில்தான் தேசிய உணர்ச்சியின் மகத்துவம் அடங்கி இருக்கிறது!

டிட்டோ ஒரு கம்யூனிஸ்ட் என்பதில் சிறிதும் ஐயமில்லை. டிட்டோவின் யூகோஸ்லோவியா ஒரு கம்யூனிஸ்ட் நாடு என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆனால் நாசர் நிச்சயமாக கம்யூனிஸ்டு அல்ல. எகிப்தை ஆள்வதும் கம்யூனிஸ்டு கட்சி அல்ல. இன்னும் கூறப்போனால் எகிப்து நாட்டில் கம்யூனிஸ்டு கட்சி சட்ட விரோதமாக்கப்பட்டிருக்கிறது.

மாஸ்கோ, டிட்டோவை முதல் தரமான எதிரியாகக் கருதுகிறது. ஆனால் நாசரை மாலை போட்டு வரவேற்கிறது.

டிட்டோவுக்கு வேண்டிய பொருளுதவியும் ஆதரவும் ரஷ்யாவிடமிருந்து கிடைக்கவில்லை. மேற்கு நாடுகளே நேசக்கரம் நீட்டுகின்றன. ஆனால் நாசருக்குத் தேவையான பொருளாதார வசதிகளையும், பக்கபலமும் ரஷ்யா தருகிறது. மேற்கு நாடுகள் கதவடைத்து விரட்டுகின்றன.

இத்தனை வேறுபட்ட சூழ்நிலையில் இயங்கும் டிட்டோவும், நாசரும் ஒன்றுகூடிப் பேசுவதும் ஒத்துழைக்க முன் வருவதும் வியப்பான செய்திதான். ஆனால் எத்தனைதான் வேற்றுமை இருந்தாலும் இருவருக்குமிடையே ஒரே ஒரு மகத்தான ஒற்றுமை இருக்கிறது. அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்து வெற்றி கண்ட மாவீரர்கள் என்பதுதான் அந்த ஒற்றுமை!

ரஷ்ய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து டிட்டோவும், ஆங்கில பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களை எதிர்த்து நாசரும் விண்ணிலிருந்த சுதந்திரத்தை, பெற்ற மண்ணில் கொண்டு வந்து நிலை நாட்டினர்! அன்னியருக்கு அடிபணியாத நெஞ்சுரமும், தாயகத்துக்கொரு தனிக்கொடி தர வேண்டுமென்ற விடுதலை ஆர்வமுமே டிட்டோவையும், நாசரையும் பிணைத்துக் காட்டுகின்றன.

ரஷ்யப் பொது உடமை டிட்டோவுக்கு மாறுபாடானதல்ல. ஆனால் அதற்காக யூகோஸ்லோவியாவின் தனித் தன்மையையும் சுதந்திரத்தையும் ரஷ்யாவின் காலடியில் சமர்ப்பிக்க டிட்டோ தயாராக இல்லை. மாஸ்கோவின் கைப்பொம்மையாக இருக்க டிட்டோவிடம் நாட்டுப் பற்றுப்பட்டுப் போகவில்லை!

மாஸ்கோ மற்ற பொது உடமை நாடுகள்மீது செலுத்திய எதேச்சாதிகாரத்தை, ரஷ்ய கம்யூனிஸ்டு கட்சி ஆட்சியின் சர்வாதிகாரத்தை உலகிற்கு எடுத்துக் காட்டிய பெருமை டிட்டோவையே சாரும். டிட்டோ சென்ற

— 11ம் பக்கம் —

வேதநாயகர் விகடம்!

மாயூரம் வேதநாயகம் பிள்ளையைத் தெரிந்தவர்களில் பெரும்பாலோருக்கு அவர் தமிழ் நாவலின் தந்தை என்பது மட்டுமே தெரியும்; முதன் முதலாகத் தமிழில் வெளிவந்த 'பிரதாப முதலியார் சரித்திரம்' என்ற நாவலை இயற்றியவர் என்று தெரிந்த அளவிற்கு, அவர் தமிழிசைப் பாடல்கள் பலவற்றைப் பாடியவர் என்றோ, பெண் கல்வி பேணிய பெருந்தகை என்றோ, ஏழைகளின் நண்பர் என்றோ தெரியாது; தமிழில் அவர் முதன்முதலாகப் பாடிக் காட்டித் தமிழிசையின் முதல்வராக விளங்கினர் என்பதைப் பலரும் உணர்ந்ததாகத் தெரியவில்லை. அருமையான அழகான பாடல்களை, மேடைகளிலே பாடக்கூடிய பாட்டுக்களை அவர் இயற்றியுள்ளார்; கவிப்புலமையும், தமிழறிவும் ஒருங்கே காணக் கிடைக்கின்றன அவர் பாடல்களில்.

அவருடைய கவிதை நயத்தை, புலமைத்திறத்தை ஆராயப்புகுமுன் அவர் வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்வோம். வேதநாயகம் பிள்ளை 1826-ம் ஆண்டு குளத்தூரில் பிறந்தார். கிறிஸ்துவ மதத்தைப் பின்பற்றிய இவர், தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் புலமை மிகுந்தவராய் விளங்கினர். ஆகவே நீதிமன்றத்தில் மொழிபெயர்ப்பாளர் பதவி வெகு எளிதில் கிடைத்தது. தன்னுடைய பதவியில் காட்டிய ஆர்வத்தின் பயனாய், சீர்காழிக்கு முன்சீப்பாக உயர்த்தப்பட்டார்; அங்கிருந்து மாயவரத்திற்கு மாற்றப்பட்டார். பெரும்பாலான காலத்தை மாயவரத்திலேயே கழித்தார். பதவிக்காலம் முடிந்ததும் சும்மா இராமல் மாயூரம் நகராட்சித்தலைவராய் இருந்து அரிய தொண்டாற்றினர். வேலைக்காலத்தில் பல துன்பங்கள் ஏற்பட்டன; என்றாலும் அவற்றைச் சமாளித்துக் கொண்டார். நகைச்சுவை கலந்த ஒரு பாடல் எழுதி அதை உடனே மறந்துவிட்டார். "பூ விற்ற இடத்திலே புல் விற்க முயன்றார்!" என்ற பாடல் அப்போது பாடப்பட்டது. பஞ்சத்தில் அடிபட்ட மக்களுக்குக் கஞ்சி வார்த்துக் கருணை வள்ளல் என்ற பட்டத்திற்குரியவரானர். 1889-ல் இறவாத புகழுடம்பு பெற்று, வெற்றுடம்பைத் துறந்தார். இனி, அவர் கவிதைத் திறமையைக் காண்போம்.

வக்கீல்கள் எவ்வளவு மோசமான வழக்குகளிலும் ஆஜராகிறார்கள், எவ்வளவு அபத்தமான வாதங்களைப் பொய் வழக்குகளிலும் வாரி வழங்குகிறார்கள், என்றெல்லாம் கண்கூடாகக் கண்டவர் அல்லவா அவர்? அதைப் பற்றி நகைச்சுவை ததும்ப ஒரு பாடல் பாடியுள்ளார்; வக்கீல்கள் பொய் வாதம் புரியும்வரை அந்தப் பாடலைப் பாடிக்கொண்டிருக்கலாம். குருடன் அம்பால் குறிபார்த்து வாதியை அடித்தான்! இப்படி ஒரு வழக்கு! ஊமையான ஒருவன் வாதியைத் திட்டினன், இந்த வழக்கில் நீதி தாருங்கள்! இந்த ஊமை திட்டியதைச் செவிடன் கேட்டுச் சிரித்தான்! இந்த அவமானத்திற்கு நஷ்டஈடு கோரி ஒரு வழக்கு! எப்படிப்பட்ட விசித்திரமான வழக்கு பார்த்தீர்களா? வக்கீல்கள் பொய்யை எப்படியெல்லாம் புனைந்து உரைத்தார்கள் என்பதைத்தான் கீழ்க் கண்ட கவிதை உணர்த்துகிறது

ககனப்பூ வந்திமகன்
கொய்தானும் அதைக்
கண்டு குருடன்
அம்பால் எய்தானும்
செகமிகை ஊமையனும்
வைதானும் அதைச்
செவிடன் கேட்டு
நகை செய்தானும்
இந்தவழக்குக் கெல்லாம்
நாம்தானா கோர்ட்டில்
வந்தவன் நமக் கெஜமானா!

இதைப்போன்றே இன்னொரு கவிதையும் காணலாம்

கரமில்லான் வாதியைப்
பிடித்தானும் இரு
காலிலான் உதைத்து
தைத்து இடித்தானும்
சிரமில்லாதவன்
கடித்தடித்தானும் பதம்
செய்யும் வேதநாயகன்
படித்தானும்

கையில்லாதவன் எப்படி வாதியைப் பிடிக்கமுடியும்? இரு காலும் இல்லாதவன் எப்படி உதைக்கமுடியும்? தலையே இல்லாதவன் எப்படி வாயால் கடிக்கமுடியும்? இப்படியெல்லாம் வழக்குகள் வந்தாலும், வழக்கறிஞர்கள் சும்மா இருந்தார்களா? அந்த வழக்குகளை ஏற்றுக்கொண்டு காரசாரமாக விவாதித்தார்களாம்;

தொண்டையைக்
கிழித்துக் கொண்டு
சண்டை செய்யும் வக்கீல்கள்
அண்டையிலிருந்து நம்
மண்டையை உடைத்தால்
நினைப்பதெப்போது நெஞ்சே
ஐயன் பதத்தை நினைப்பது

இப்படியாக வழக்குரைஞர்களைக் கேலி செய்கிறார் வேதநாயகம் பிள்ளை.

வேதநாயகம் பிள்ளையின் கவிதைகள் அடங்கிய தொகுதி நீதி நூல் என்ற பெயரில் வழங்குகிறது. இதில் பல அரிய கருத்துக்கள்–அறிய வேண்டிய கருத்துக்கள்–அடங்கிக் கிடக்கின்றன. கற்பு நெறியைப்பற்றியும், சமத்துவம்பற்றியும், சினத்தைப்பற்றியும், செல்வச் செருக்கைப்பற்றியும், பொறுமையைப்பற்றியும், நற்குணங்களைப்பற்றியும், இன்னும் இதுபோன்ற கருத்துக்களைப்பற்றியும், நல்ல கவிதை உருவில் வடித்துக் கொடுத்துள்ளார் வேதநாயகம் பிள்ளை.

நல்ல பெண்ணைப் பார்த்துத் திருமண செய்துகொள்ளுமாறு தன் தோழனை அனுப்புவதுபோல் ஒரு கவிதை எழுதியுள்ளார். அதில் தன் தோழன் எப்படிப்பட்ட பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று அழகாகக் கூறுகிறார். அழகும், குணமும் உள்ள பெண்ணாக இருக்க வேண்டும்; அப்படி அழகில்லாவிட்டாலும், குணமாவது உள்ளவளாயிருத்தல் நல்லது; ஆனால் அழகிருந்து, குணமில்லாதவளை மட்டும் நீ கட்டிக் கெட்டுப் போகாதே; கடும்புலி வாழும் காடு; அது வீடல்ல என்கிறார் எவ்வளவு பொருத்தம்!

அழகும் குணமும் உள்ளவள்
நல்ல ஜோடு
அழகில்லை ஆயினும்
குணத்தையே தேடு
பழகு நற்குணமில்லா
அழகியின் வீடு
பாம்பு, புலி, கரடி
வாழ்ந்திடும் காடு!

நல்ல பெண்ணைப் பார் நீ தூதா! மாமியாருக்கும் மருமகளுக்கும் இந்தக் காலத்தில் எவ்வளவு சண்டைகள் நடக்கின்றன.

வேதநாயகர் காலத்திலும் இத்தகைய சண்டைகள் இருந்திருக்க வேண்டும்; அவர் இதயத்தைப் புண்படுத்தியிருக்க வேண்டும் என்பதைச் சில பாடல்களால் உணரமுடிகிறது. கணவனுக்கும், அவன் தாய்க்கும் சண்டை உண்டாக்குதல், நாத்தனாரிடம் சண்டை போடுதல் முதலியவைகளைத் தவிர்க்கவேண்டும் என்பதை நகைச்சுவை மிளிரக் கூறுகிறார், கீழ்க்கண்ட பாடலில்!

வேதநாயகர் அவர்கள் சிறந்த நாவலாசிரியர் மட்டுமல்ல, நல்ல கவிஞரும் ஆவார் என்பதை இந்தக் கட்டுரை மெய்ப்பித்துக் காட்டுகிறது. அவர் எழுதிய அற்புதமான கவிதைகளை இங்கு விமர்சனம் செய்கிறார் கட்டுரையாளர். வினயமும் விகடமும் கவிதைகளில் புதையுண்டு காணப்படுகின்றன.
[ஆ-ர்.]

மாமிமேல் வன்மம்
காட்டாதே—உன்றன்
சாமிக்கும் மாமிக்கும்
சண்டை மூட்டாதே!
தலைவன் நெஞ்சைக்
கரைக்காதே—மாமி
தலைமேலே நீ மிளகாய்
அரைக்காதே!
நாத்திமேல் கச்சை
கட்டாதே—வெகு
சாத்திரமாய் அவள்
தலையை வெட்டாதே!

எவ்வளவு எளிய, இனிய, கருத்துள்ள பாடல்!

கணவன் வியாபார நிமித்தமாய் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கிறான்; விரகதாபத்தால் தலைவி வெம்பித் துடித்துத் தவிக்கிறாள்; "பூச்சூட்டுவதும், தலை முடிவதும், இன்ன பிற காரியங்களும், என் தலைவர் பார்த்து மகிழ்வதற்குத் தானே? அவர் இல்லாதபோது இவைகள் ஏன்?" என்று கேட்கிறாள்; தோழி வெட்கித்தலை குனிகிறாள்:

உன்னால் பூச்சூடல்
நெஞ்சுவத்தல் ஒப்பனை
பண்ணல் எல்லாம்
அவர் பார்க்க வேயன்றோ!
அன்னால் தன் பிரிவினை
அறிந்தும் தோழி நீ
மன்னா வந்தனை இது
மடமை ஆகுமே!

கற்பு நெறியைப்பற்றிக் கூற வந்த வித்தகர் வேதநாயகர், கற்பு ஆண் பெண் இரு பாலார்க்கும் பொதுவானது என்ற கருத்தை வலியுறுத்துகிறார். சுவர் ஒன்றில் அழகிய சித்திரம் ஒன்றைப் பார்த்த ஆண் ஒருவன், அதைத் தன் இல்லக்கிழத்தியும் பார்க்க வேண்டும் என்று அவளை அழைக்கிறான். அவள் சொல்கிறாள்; "அது ஓர் ஆணின் படமானால் நான் அதைப் பார்க்கமாட்டேன்; அது தவறான காரியமாகும்; அது பெண்ணின் உருவமானால் அதை நீங்கள் பார்த்துச் சுவைப்பதை என்னால் கண்டு சும்மா இருக்கமுடியாது" இதைக் கீழ்க்கண்ட பாடலில் காணலாம்.

ஓவியர் நீள் சுவர் எழுதும்
ஓவியத்தைக் கண்ணுறுவான்
தேவியை அழைத்திட
ஆண் சித்திரமே நான் பாரேன்
பாவையர் தம்உருவெனில் நீர்
பார்க்க மனம் பொறேன்
என்றாள்,
காவிவிழி மங்கை இவள் கற்பு
வெற்பின் வற்புளதால்!

கருங்குவளை மலர்ஒத்த கண்களை உடைய இப்பெண்ணின் கற்பு மலையளவு உயர்ந்ததாகும்! இவளே கற்புடைய பெண் என்கிறார்! பொருத்தமான பாடல்!

தாது ஆண்டுப் பஞ்சம் ஏற்பட்டது, ஏது செய்வது என்று தெரியாமல் தவித்தனர் மக்கள்; தன்னால் இயன்ற அளவிற்குப் பணம் கொடுத்துக் கஞ்சித் தொட்டிகள் பலவைத்து, ஏழைகளின் இன்னலை ஓர் அளவிற்குப் போக்கினர் அண்ணல் வேதநாயகம், பல மதத்தினரும் சேர்ந்து மழை பெய்ய வேண்டும் என்று இயற்கையின் தயை வேண்டி நின்றார்கள். சர்வசமய சமரச கீர்த்தனைகள் என்ற அழகிய நூல் இயற்றி அதில் இருந்த பாடல்களைப் பாடி மழை பெய்ய வணங்கினர்கள்.

"மேகமே! உன்னிடமிருந்த நீர் எங்கே போய்விட்டது? திருடர்கள் திருடிக்கொண்டு போய்விட்டார்களா? தண்ணீரைப் பொழியாமல் ஏழைகள் கண்ணீரைப் பெருக்குகிறாயே! இது உனக்கு நீதியாகுமா? நேரே வந்து, கடலில் உள்ள நீரை வாரிக் கொண்டு வரண்ட நிலத்தில் தண்ணீரைப் பெய்விப்பாயாக நாங்கள் உனக்கு நன்றி செலுத்துவோம்," என்று கவிநயம் மிகுந்த பாடல் ஒன்றைக் காண்கிறோம்.

காரே உன்நீரை எல்லாம்
கள்வன் கவர்ந்தானோ
நீரே உதவாய்
நெறியாமோ—நேரேதான்
வாரிஉண்டு வாரிமொண்டு
வாரியுண்டு வான்இருண்டு
பேரி கொண்டு நீ திரண்டு பெய்!

மேகத்திலிருந்து மழை பெய்யாததால், நீரை எல்லாம் கள்வன் கவர்ந்துவிட்டானோ என்று வெகு நயம்படக் கேட்கிறார்?

பிரதாப முதலியார் சரித்திரத்திலும், அதன் இணைப்பான சுகுண சுந்தரியிலும் இதுபோன்ற கவிதை நயம் மிகுந்த, கருத்துவளம் செறிந்த, பல வசனப்பகுதிகளைப் பார்க்கிறோம். இன்னும் அவர் சீர்காழிக் கோவை, திருவருள் மாலை, திருவருள் அந்தாதி, தேவமாதா அந்தாதி போன்ற நூல்களையும் இயற்றியுள்ளார். ஒவ்வொரு நூலிலும் உள்ள நயம் படித்துப் பயன்பெறத் தகுந்தது. படித்துக் கவிதை இன்பம் பருகுங்கள்! அதற்காகவே ஓர் இரு பாடல் நயத்தைக் காட்ட விரும்பினேன்!

அவர் வாழ்ந்த காலத்துச் சூழ்நிலையைக் கருதினால், அவர் பாடல்களின் பெருமையும், தொண்டின் சிறப்பும் பன்மடங்கு போற்றி வணங்கத் தகுந்த ஏற்றமுடைய பணியாகக் கருதவேண்டும். நீதி நாயகராம் வேதநாயகர் புகழ் பாடித் தமிழ் வளர்ப்போம்!

–நா. ஜகந்நாதன் எம். ஏ.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன் எவர்வரினும் நில்லேன்: அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 ‖ 9—8—58 ‖ இதழ் 8

"கவர்னரைக் கவனியுங்கள் !"

மாநில கவர்னர்களுக்கு மாநில அரசாங்கம் உரிய மதிப்பைத் தரவேண்டும் என்று பிரதம மந்திரி நேரு அவர்கள், மாநில முதலமைச்சர்களுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார். திடீரென்று இந்தக் கடிதப் போக்குவரத்திற்கு என்ன காரணம் என்று புரியவில்லை. பொதுமக்களின் வரிப்பணத்தில் இலட்சக்கணக்கில் எடுத்து விழுங்கிக்கொண்டிருக்கும், காரண காரியமில்லாத ஒரு பதவி அவசியமில்லை; அதை ஒழித்தே ஆகவேண்டும் என்ற நிலைக்குத் தென்னாடு வந்திருக்கிறது. கவர்னர் பதவி தேவையில்லை என்று திராவிடம் எதிர்க்கிறது. இந்த நேரத்தில் பண்டிதர் கடிதம் எழுதுகிறார், 'கவர்னர்களை அவமதிக்காதீர்கள்' என்று.

இந்த நிலைமை ஏன் ஏற்பட்டது? எல்லா மாநிலங்களிலும் கவர்னர் பதவி தேவையில்லை என்ற நிலை அரும்புவிட்டு அதன் பயனாய் எழுந்த பிரச்சினையா இது? அல்லது யாராவது ஒரு கவர்னர் நேருவிடம் மண்டியிட்டு முறையிட்டதின் விளைவா?–நேருவின் திடீர்ச் சிபாரிசு பிறக்க என்ன காரணம்?

கவர்னரை, மத்திய சர்க்காரின் பிரதிநிதி என்று சொல்லுகிறார்கள். உண்மைதான். அந்தப் பிரதிநிதி ஏன் என்பதே தென்னாட்டின் கேள்வி. கவர்னர், எந்தக் காரியத்தையாவது பொதுமக்களோடு துணைநின்று சாதித்தது உண்டா? சென்னை சட்ட மன்றத்தில் தமிழில் நடைபெறும் வாதப் பிரதிவாதங்களை புரிந்துகொள்ளக்கூடிய சக்தி சென்னை கவர்னருக்கு உண்டா? உரையாற்ற ஆற்றலுண்டா? கவர்னர் பதவியால் மக்களுக்கும், மாநிலத்திற்கும் என்ன நலன்? மாநில சர்க்காரின் ஆளும் கட்சி மெஜாரிட்டியின் பெயரால் மக்களுக்கு விரோதமான காரியத்தைச் செய்யும்போது, கவர்னர்கள் தலையிட்டு மக்களுக்காக வாதிட்டதுண்டா? இந்த நேரத்தில் 'நாங்கள் மத்திய சர்க்காரின் ஒற்றர்கள் அல்லர்' என்று சொல்லிவிடுகிறார்கள் கவர்னர்கள். மக்களைக் கவனிப்பதற்குமல்ல, மாநில அரசாங்கத்தைச் சரிவரத் திருத்துவதற்குமல்ல என்றால் கவர்னர் பதவி–அந்தப் பெரும் பதவி – அந்த யானைப் பதவி அவசியம்தானா?

மாநில அரசாங்கத்தின் தலைவராகச் சட்டசபைக் காங்கிரஸ் கட்சியின் தலைவரே தேர்ந்தெடுக்கப்படுகிறார். மத்திய அரசாங்கத்தின் நிர்வாகமும் சட்டசபை காங்கிரஸ் கட்சியின் தலைவரிடம்தான் ஒப்படைக்கப்படுகிறது. இருவரும் ஒரே கட்சியைச் சார்ந்தவர்கள். பிறகெதற்கு மத்திய சர்க்காரின் பிரதிநிதி? பந்தியிலே உட்காராதே என்னும்போது இலை கிழிசல் – என்னும் நாட்டுப்புற பழமொழியை இந்த நேரத்தில் பண்டிதநேரு நமக்கு நினைவூட்டுகிறார். கவர்னர் வேண்டாம்! அந்தப் பதவியின் பெயரால் இலட்சக்கணக்கில் பணம் பாழாகிறது–என்று தென்னகம் கேட்கிறது. இந்த நேரத்தில் பண்டிதர் கடிதம் எழுதுகிறார், கவர்னர்களைக் கவனியுங்கள்–என்று. கவர்னர்களுக்கு என்ன குறை தென்படுகிறது. ரத-கஜ-துரக-பதாதிகள் உண்டு. ராஜ பவனம் உண்டு. வேறென்ன வேண்டும்? மக்கள் கவர்னர் யாரென்றுகூடத் தெரிந்துகொள்ள ஆசைப்படவில்லையே! இதற்கு யாரென்ன செய்வது? தைரியமிருந்தால், மாநில முதலமைச்சர்கள் தங்களைக் கவனிப்பதில்லை என்று கவர்னர்கள் ஒன்றுகூடிப் பேசி பதவிகளை ராஜினுமா செய்யலாம். மானம் காத்ததுபோலவும் இருக்கும், வரிப்பணத்தைப் பாதுகாத்ததுபோலவும் ஆகும். எந்தக் கவர்னர் இதற்குத் தயார்?

பன்மொழிப்புலவர் அவர்களுக்கு ஒரு சிங்களக் கவிஞரின் கடிதம்

(சிங்கள எழுத்தாளர்) கல்பொதுகொட "நெணருவன்"
எண்: 173/37, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு 13.
இலங்கை, 23-7-58.

உயர்திரு. பன்மொழிப்புலவர்
கா. அப்பாதுரையார், எம். ஏ., எல். டி.,
"தென்றல்", சென்னை-6.
தமிழ் நாடு.

பேரன்புமிக்க பெரியார் திரு. அப்பாதுரையார் அவர்களுக்கு! எனது தாழ்மையான நல்வணக்கங்கள் பல!

அறிஞரே! தங்களுடைய கதை, கட்டுரை, கவிதைகளை தவறாது படித்து வருபவர்களில் நானும் ஒருவன். தமிழ் மக்களிடம் மட்டுமல்லாது சிங்கள, ஆங்கில மக்களிடமும் தங்கள் எழுத்து நடையால் உருவாகிய புத்தகங்கள் வரவேற்கப்படுகின்றன. தங்களை யறியாத சிங்கள எழுத்தாளர்கள் என்னை உள்பட யாருமே இருக்க முடியாது என்று நான் எடுத்து இயம்புவேன். மேலும் ஆசிரியர் திரு கண்ணதாசனால் நடாத்தப்படும் "தென்றல்" வார ஏட்டையும், "முல்லை" மாதப் பத்திரிகையையும், அறிஞர் "அண்ணா"வால் நடத்தப்படும் "திராவிட நாடு" திரு மு. கருணாநிதியால் நடத்தப்படும் "முரசொலி", "முத்தாரம்" முதலியவைகளையும நான்விடாமல் தொடர்ந்து வாங்கி வருகிறேன். அதிலுள்ள எண்ணற்ற பயனுள்ள விஷயங்களைப் படித்து இன்புறுகிறேன்.

மேலும் நான் ஒரு சிங்களக் கவிஞர். என் சொந்த பெயர் அ. சு. மு. ஞானரத்ன. அதைச் சுருக்கி புனைபெயராக "நெணருவன்" என்று வைத்துள்ளேன். "கல் பொதுகொட" என்பது என் ஊரின் பெயராகும். தற்பொழுது கொழும்பு மாநகரில் உள்ள ஆட்டுப்பட்டித் தெருவில் வசித்து வருகிறேன். கவிஞராகவுமல்லாது கதை, கட்டுரை, நாடகம், எழுதும் எழுத்தாளராகவும், பணியாற்றி வருகிறேன். இதுவுமல்லாது எங்கள் தெருவில் உள்ள "சமாதான கமிட்டி"யின் தலைவராகவும் பணியாற்றி வருகிறேன்.

மேலும் நான் "சுமக" என்ற பௌத்தக் கதை புத்தக உருவில் வெளியிட்டிருக்கிறேன். அதைத் தொடர்ந்து இன்னும் பல நாவல்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.

இத்துடன் அனுப்பப்பட்டிருக்கும், ஏட்டின் பெயர் "கிவி வினய காவிய" என்பதாகும். "பாளி" பாஷையில் உள்ள இக்காவியத்தை சிங்களத்தில் மொழிபெயர்த்து எழுதியிருக்கிறேன்.

இதை 2500 சமபுத்த ஜயந்தி வெசாக் தினம் வெளியிடப்பட்டது. இன்னும் பல நாவல்களும், நாடகங்களும்; சிறுகதைகளும், கட்டுரைகளும், அச்சில் இருக்கின்றன. அவைகளில்:—"மம என்னம்" (நான் வருகிறேன்.) "அமராகே ஆலய" (அமராவின் காதல்) "கெஹெனிய" (பெண்) "நிளிய" (நடிகை) "சொபனி" (அழகி) "பலாபொரொத்து நொவு ரே" (எதிர்பார்க்காத இரவு) "பாஹிர ஒபய" (வெளி அழகு) முதலிய நாவல்களும், "பெம் சடன" (காதல் போராட்டம்) எனும் நாடகமும் அச்சில் இருக்கின்றன.



மேலும் என்னுடைய எழுத்தோவியங்கள் "அரமுன" "மௌபிம" "சிங்கள பலய" "நவர லய" "தினமின" "லங்காதிப" முதலிய மாத, வார, தின, பத்திரிகைகளில் வெளிவந்த வண்ணமிருக்கின்றன.

நான் எழுதிய நாடகமான "விதுஹல் ரெஜின" ("காலேஜ் ராணி") பிரபல சிங்கள நடிகர்களால்நடிக்கப்பட்டு, இலங்கையில் பிரசித்தி பெற்ற "ராயல் காலேஜில்" அரங்கேற்றப்பட்டது. இந்நாடகத்தை பல நூற்றுக் கணக்கானவர்கள் கண்டு களித்தனர். பத்திரிகைகளெல்லாம் ஒரு முகமாக பாராட்டி விமர்சனம் செய்தன.

மேலும் நான் "வித்தோத்திய ஸ்ரீலங்கா மஹா சங்கத்"தாரால், சிங்களத்தில் நடத்திய இலக்கியப் பரீட்சையில் தேறி சிங்கள இலக்கிய கல்வியாளன் "கவிஞன்" என்ற பட்டம் பெற்றுள்ளேன்.

இவ்வளவையும் நான் எடுத்துக் கூறுவது தற்புகழ்ச்சி என்று நினைக்க வேண்டாம். என்னைப்பற்றி தாங்கள் கொஞ்சம் அறிந்துகொள்வதற்காக. இத்துடன் உருவப் போட்டோவையும் அனுப்பியுள்ளேன்.

மேலும் தாங்கள் ஆங்கிலத்தில் எழுதிய ஒரு அரசியல் கட்டுரை நூலை சிங்களத்தில் "தேச பாலன வித்யா சாரய" என்ற தலைப்பிட்டு "எஸ். ஒய். எம். ஏ. விக்ரமசிங்க" என்பவர் மொழிபெயர்த்து, வெளியிட்டிருக்கிறார். இதை இலங்கையில் உள்ள சிங்கள அரசியல் தலைவர்கள்,

— 8ம் பக்கம் —

தோளிலே அழகற் சரக்கு!

"இறந்துவிடு அல்லது என்னைத் துறந்து எங்கேனும்தொலைஎன்று வன்னெஞ்சன்போல் புன்மை பேசி இரக்கம் என்ற ஒரு பொருள் இல்லாத அரக்கனைப்போல் இராமன் பேசினன். உயிர்விடத் துணிந்தாள் சீதை. அனுமன் வாதாடினன்- பலன் ஏதுமில்லை" அனுமன் வாதாடினனும்—இராமாயணம் அனுமனுக்குத் தந்துள்ள உருவம் எல்லோருக்கும் தெரியும். ஆனல் இந்தப் புதுமையாளர் சீதையை நெருப்பிலிட்டு சோசித்துப் பார்த்தவன் இராமன்-புகழுக்குரியவன்- என்று நினைவூட்டுபவர்-கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்ட வீரர்-ஆனல் விலக்கப்பட்டவர்- அவருடைய கருத்துரைகளைத் தருகின்ற பத்திரிகையாவது-அதன் ஆசிரியராவது மறக்க வேண்டாமா?

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் இலக்கியத் துறையிலே கம்பன் வழிச் செல்கின்ற காரணத்தால் தான் தாயகத்துப் பெருமையையும் புகழையும்-கலை உணர்வையும் பெருவதற்குத் தவறிவிடுகிருர்கள். சமுதாயத்திலும்-சாதிப் பிரிவுகளிலும் மலிந்துவிட்ட குறைபாடுகளைக் களைந்தெறிய கம்யூனிஸ்ட் கட்சி எந்தவிதமான வெகுஜன இயக்கங்களையும்- கிளர்ச்சிகளையும்- தத்துவார்த்தப் புத்தக விற்பனைகளையும் பனையும் பார்க்கிருர்கள். ஆனல் கம்பன் தருகின்ற காட்சிகளில் சோவியத்தின் சோபிதங்கள்தெரிவதில்லை. மாசேதுங்கின் மகிமைகள் மாண்புகள்-மக்களாட்சிப் பண்புகள் தோன்றுவதில்லை. நாம் மகிழ முடிவதில்லை. ரஷ்ய நாட்டுப் புஷ்கின் ஒரு கவிஞன்தான்-ஊமையாக அடங்கிக் கிடந்த மக்களை ஊராள்வோரின் கூர்வாள் கண்டும் கலங்காத உள்ளத்தவராக மாற்றிப் போர்க்கொடி யேந்தச் செய்தான். எத்தர்களின் கொடுமைகளைத் தகர்த்தெறியும்-பெரும் படையைப் பொங்கியெழச் செய்தான் - புது வாழ்வு தேடித் தந்தான் - அவன் புரட்சிக் கவிஞன்- புத்துலகச் சிற்பி!

ஆனல் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளின் பாசத்துக்கும் நேசத்துக்கும் உரிய கம்பன் - மாடமாளிகைகளைக் காட்டினன் - அங்கே மன்னன் மகளைக் காட்டினன் - கீழே இராமனைக் காட்டினன். கண்ணெடு கண் பேசிதைக் காட்டினன்-எவருக்கும் புரியாமல் நடைபெற்ற பருவச் சேட்டைகளையும் மிதிலைநகர் வீதிகளிலே விளக்கியிருந்தான்! இது எந்த வகையிலும் கம்யூனிசத் தத்துவங்களுக்குப் பலன் கூட்டியதாகாது! வேட்டையாடப்பட்ட தொழிலாளவர்க்கத்திற்கு- சாட்டை தோற்கடிக்க முனைந்து தோல்வித் தோடா அணிந்துகொண்டவர்கள் ஏராளம் - அவர்களின் எண்ணிக்கையிலே கம்யூனிஸ்டுகளும் தங்களைச் சேர்த்துக்கொள்ள விரும்பித்தான் நச்சு இலக்கியம், நாச இலக்கியங்களுக்கு மத்தியில் கம்பனையும் கொண்டுவந்து மேடையேற்றுகிருர்கள். நல்ல இலக்கியங்களைப் பற்றி எதுவும் கூறமுடியாததால்! கம்பனைப் பாராட்டுகிறோம் இன்னின்ன காரணங்களுக்காக! என்ருவது கம்யூனிஸ்டுக் கட்சியினர் சொன்னதுண்டா? எடுத்துப் பேசுகின்ற பெரிய பேச்சாளரிடத்திலாவது கேட்டதுண்டா? கம்யூனிஸ்டுகளுக்கு ஆதரவாளர்களாக-கம்பனைப்பற்றி - வ. உ. சி. என்ன சொன்னர். செல்வகேசவ முதலியார் இப்படிச் சொல்கிருர். பாரதியார்-கம்பனைப்போல் வள்ளுவனைப்போல் என்று பாடியிருக்கிருர். ஆகவே நாங்களும் சொல்லுகிறோம். வள்ளுவனைப்போல் கம்பனும் வாழ்த்துக்குரியவன்! வள்ளுவன் வாழ்வியலைக் காட்டினன். கம்பன் வனிதையரைப் பற்றியே பாடிக்காட்டினன்! அறிவும்அறமும் இணைந்து நின்றது, வள்ளுவத்தில். ஆனல் கம்பனது காவியப்பூங்காவில் கல் காரிகையானதும் கணிகை காதலியானதும்-மாரீசன்மாயமான் பாரம்பரியம் உள்ளது. ஆனல் தலைமைப் பீடம் அந்தக் கட்சியின் பொதுக் காரியதரிசியோ -வடநாட்டுப் பெருந் தலைவர்களோ-சமுதாயம்- இனம்- கலை- இலக்கியம்- இன்ன பிற பகுதிகளில் தங்களது அறிவாற்றலைச் செலுத்தவில்லை! தென்னுட்டுக் கலாச்சாரத்திற்கும்- வடநாட்டு டாங்கேக்களின் கலாச்சாரத்திற்கும் எந்த வகையிலும் உறவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியென்று இணைத்துக்கொள்ள முடிந்தாலும் இலக்கியக் கருத்துக்களை இரு பகுதியினரும் ஏற்றுக்கொள்ளும் கால கட்டத்தில்-கம்யூனிஸ்ட் கட்சியில்லை. அவர்களுடைய அமிர்தசரஸ் வகுத்த வழி எத்தனையோ பல செய்திகளைப்பற்றி எதுவும் கூருமல் வேண்டுமென்றே பல பிரச்னைகளை ஒதுக்கித் தள்ளிவிட்டது. குறைபாடுகள் பலவற்றை அடுத்த கிழமை விளக்க விரும்புகிறோம். கம்யூனிஸ்டுகளின் சொல்லும் செயலும் வேறு என்பதற்கு ஜீவானந்தம் போன்றவர்கள் கம்பஇராமாயணத்தைக் கக்கத்திலேயேந்தி காடுமேடு சுற்றிப் பேசுவதே

தொண்டையிலே சுரண்டற் குரல்!

கைக்கொள்வதில்லை. சாதி யொழிப்பில் சமரசம் தேடுவதில் கம்பனிடத்தில் ஆதாரம் இருக்கின்றதா என்று தேடிப் பார்த்துவிட்டுக் கலை நயம் பற்றியும் கவிதை நயம்பற்றியும் கூறிவிட்டுக் கம்பன் ஆரிய திராவிடப் பிரச்னைக்கு வழிகோலாதவன் என்றும் வாதாடிவிட்டு, வந்த வழியே திரும்பிப் போய்விடுகிருர்கள். கலையை வைத்துக் காலத்தைக் கணக்கிட வேண்டுமென்பது கம்யூனிஸ்டுகள் கருத்து-கம்யூனிஸ்ட் கட்சிக்கு பொதுவான குறிக்கோள் இல்லை. எனவே கலைதான் காலத்திற்கு ஏற்ப மாற வேண்டும் என்பதனை இந்திய உப கண்டத்திலும் மார்க்சியத்துக்காகப் போரரிடும் பேரறிவாளர்கள் உணருங் காலம் உன்னதமான காலமாகும். தென்னுட்டுச் சூழ்நிலைகளும் வடநாட்டு வர்க்கப் பாரம்பிரிய நிலைகளும் வேறு வேறு என்பதனைக் கம்யூனிஸ்டுகள் உணராத காரணத்தினுலேயே கம்பன் கூறுகின்ற காவியத் தலைவனும் வடநாட்டுத் துளசிதாசர் டாங்கே போன்றவர்களால் கவனிக்கப்படாத கவியும் கதாநாயகனுமாக இராமாயணக் கதை, கருத்துக்கள் சிதைந்த சித்திரமாகக் காணப்படுகிறது. சோவியத் மண் வளம் பெறுவதற்கு முன்னுல் மக்களின் மன வளம் பெற்றிருந்தபடியால்தான் புதுமையான எண்ணங்களுக்கு அங்கே பூரிப்பான வரவேற்பும் ஆதரவும் கிடைத்தன. அந்த நாட்டு இலக்கியங்கள்-அயோத்தி மக்கள் நிலை குலைந்து-குடித்துவிட்டு மயங்கிக் கிடந்ததை-ஆசிரமங்கள் ஆபாசப்பட்டதைப்போன்ற செய்திகளைத் தரவில்லை! சோவியத்தைப் பாருங்கள். நவசீனத்தைப் பாருங்கள் என்று குரல் கொடுப்பவர்கள்-கம்யடிகளினுல் உதிரம் சிந்திய உழைப்பாளிக்கு-கம்பன் காவியமும் ஓவியமும் - உதவமுடியவில்லை! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகள் தங்களுடைய இலட்சியப் பணியை எல்லாம் செய்து முடித்துவிட்டது போல மதித்து - கம்பனுக்காகக் கடும்தவம் செய்து உழைக்க முடிவு செய்துவிடுவது கட்சியின் அடிப்படை கருத்துக்களுக்கு நிரந்தரமான சமாதி கட்டுவதாகவே முடியும். திராவிடர் இயக்கத்தின் பகுத்தறிவுவாதக் கருத்துக்களைத் ஆனதும்தான்! பொதுவுடமைத் தத்துவத்தின் ஓரத்திலேயே கோசலைச் செல்வனையும் ஜனகன் மகள் ஜானகியின் பொலிவையும் சேர்த்துவைத்து இலக்கியப்பணியென்று இயம்புவது - இயல்பானதல்ல. இறுமாப்புக்கு ஓர் உதாரணமாகும்!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் கொள்கைகள்தான் சர்ச்சைக்குரியவைகளாக இருக்கின்றன என்ருல்-பலராலும் கவனிக்கப்படாத பகுதியாக அவர்களது காரணமாக உள்ளது. காஷ்மீரத்திலிருந்து கன்னியாகுமரிவரைபேதங் காணங் கூடாது. நாமெல்லோரும் இந்தியர்களே என்று உறவு கொண்டாடிய கம்யூனிஸ்டுகளின் பலவகையான பாரம்பரியங்களிலேதான்- கம்பனை டாங்கே கவனிப்பதில்லை. வடக்கே போனுல் ஜீவானந்தங்களையும் அஜாய்கள் அறிமுகப்படுத்துவதில்லை. அகமகிழப் பாராட்டுவதுமில்லை. இலக்கியத்தின் பெயராலே இனத் துரோகமும்-கட்சியின் பெயராலே-நாட்டுத் துரோகமும் செய்து வருகின்ற கம்யூனிஸ்டுகள் மதத்தைப்பற்றியும் மத வெறிகளைப்பற்றியும் மார்க்சிய முடிவுகளுக்கு முரண்பட்டுப் போகாமல் நிற்க வேண்டும். இல்லையெனில் கம்யூனிசத்தத்துவங்களுக்குக்கூறப்படும் எல்லாப் பெருமைகளும் கம்பன் பெருமையிலே கரைந்து போகும். கம்பனையும் இளங்கோவையும் பிறவிச் சொத்தாக வைத்துக்கொள்ளும் உரிமை 'இந்தியத் தமிழர்களுக்கு' தேவையாக இருக்கலாம். ஆனல் வர்க்கப் போராட்டங்களின் வாரிசுகளான கம்யூனிஸ்டுகளுக்கு கம்பரது-காமவேள் நடனசாலைக் காட்சிகள் தேவையா? திருந்தாத-இன்றுவரை உணராத புதுடில்லித் தலைமைப் பீடமும்- செயலாளர்களும் சொல்லுக்கும் செயலுக்கும் ஏற்பத்தத்துவங்களைத் தயாரிக்க வேண்டும்!

—கூடலரசன்

வடசென்னை அவதூறு வழக்கு

எஸ். பி. டி. திராவிடமணி முதலியோர் விடுதலை

24-4-58ல் சென்னை, இராயபுரம் தொப்பை முதலி தெருவில் நடைபெற்ற கழகக் கூட்டத்தின்போது, எதிரிகள் சிலர் கூட்டத்தினர் மீது கற்களை விசி வன்செயலில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அந்தத் தெருவில் குடியிருக்கும் சங்கரன் செட்டியார், நமது கழகத் தோழர்களான எஸ். பி. டி. திராவிடமணி, ஆறுமுகம், எஸ். ஜி. சண்முகம் ஆகியோர் மீது பி-4 காவலர் நிலையத்தில், கழகத் தோழர்கள் வீட்டை உடைக்க முற்பட்டனர் என்றும், கொலை செய்ய முயன்றனர் என்றும் தொடுத்த வழக்கு விசாரணை முடிவுற்று, தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கு விசாரணை மூன்று திங்களாக நடைபெற்றது.

கழகத் தோழர்கள் குற்றவாளிகள் அல்லர் என்று கூறி, எல்லோரையும் 8-வது மாநில நீதிபதி ஆவுடைநாயகம் விடுவித்தார்; வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

நமது கழகத் தோழர்களுக்காக வழக்கறிஞர்கள் எஸ். தெய்வசிகாமணி, கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் வாதாடினர்கள்.

நீதிமன்ற நடவடிக்கைகளைக் கவனிக்க ஏராளமான கழகத் தோழர்கள் வந்திருந்தனர்.

பெண் புலி

"குருஜீ!...தாங்கள்தானே எனக்குப் 'பெண்புலி' எனப்பெயர் வைத்தீர்கள்?...நீங்களே இன்று என்னைக் 'கோழைப்பெண்' என்று கூசாமல் கூறலாமோ?," என்று கூறி நாணத்துடன் நெளிந்தாள் அந்த நாட்டு அரசகுமாரியான திருமதி 'பெண்புலி'!

அந்தப் பெண்புலியை அப்படியே தூக்கி விழுங்கி விடுபவர்போல் பார்த்துக்கொண்டே அமர்ந்திருந்தார், குரு சிங்கதேவ் அவர்கள்!

"என்ன குருஜீ! பதிலே பேசவில்லையே! என்னுடைய சொந்தப் பெயர் மறைந்தாலும் தாங்கள் வைத்த பெண்புலியென்ற பெயர் மட்டும் மறையவில்லையே!..."

"ஆம்! கண்ணே!...நீ கோழையல்ல!......உண்மையிலே......புலி போன்றவள்தான்! ஆனால் இந்தப் பெண்புலியின் கடைக்கண்பார்வை இந்தக் கடையேனுக்குக் கிட்டவில்லையே! ஊம்?"—இங்ஙனம் பேராசை பிடித்த சிங்கதேவ், பெண்புலிக்கு வலை வீசினான்!

"என்ன குருஜீ! ஏதேதோ புரியாமல் பேசுகிறீர்களே! தாங்கள் எத்தனையோ கலைகளைக் கற்றுத் தந்தீர்கள்! ஆனால் பிறர் உள்ளத்தை உணர்ந்து கொள்ளும் கலையை மட்டும் கற்பிக்கவில்லையே! குறிப்பாகத் தாங்கள் உள்ளத்தை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லையே!"

"புரிந்துகொள்வாய்! விரைவிலே புரிந்துகொள்வாய், கண்ணே! இன்றிரவு உனக்கு வானசாஸ்திரத்தைப் பற்றி சில விந்தைகளைக் கற்பிக்க விரும்புகிறேன்! அழகான மதுவகைகளுடன் இன்றிரவு காட்டிற்குச் சென்று, அங்கேயுள்ள பொய்கையருகிலே, பல்சுவை உணவுகளையும், பானத்தையும் அருந்திவிட்டு வானவியலைக் கற்று மகிழலாம்! இதுவரையில் காணாத கொள்ளை இன்பத்தை, நீ காணப்போகிறாய்! இல்லை! இல்லை! கண்ணே! அனுபவிக்கப்போகிறாய்! அரண்மனைக்குச் சென்றுவிட்டு உடனே திரும்பிவிடு! முழுமதி தோன்றிடும்போது 'பெண்புலிமதி' இங்கே இந்தக் குருவின் முன்னால் தோன்றிட வேண்டும்! என்ன தண்மதியே! வெண்மதியே!"

"குருஜீ! என்ன...இது! தாங்கள் என்றுமில்லாதபடி ஏதேதோ உளறுகிறீர்கள்! ஏராளமான பழவகைகளுடன் தயாராய் வந்திடுவேன்! கானகம் சென்று களிப்புடனே வானவியல் கற்றிடுவோம்! ஆனால் மதுவகைகள் வேண்டாம்! அது மதிமயங்கச் செய்துவிடும்!"

"போடி போ! முட்டாள் மங்கையே! மதுவின்றேல் வானவியல் புரியாது! மதுவகைகள் நான் கொண்டுவருகிறேன்! பாலையும் பழத்தையும் மட்டும் நீ கொண்டுவா!"

"குருஜீ! துணைக்கு காவலாளர் யாரையேனும்...!"

"சீச்சீ! என்ன வார்த்தை கூறினாய்! அரசகுமாரிக்கு நான் கற்பிக்கப்போகும் வானமண்டல விந்தைகளை - இன்பபுரி இரகசியங்களை மற்றவர் அறிதல் தகுமோ? பெண்புலியே! நாம் கானகம் செல்லும் செய்திகூட இரகசியமாகவே இருக்கட்டும்!"

"உத்திரவு குருஜீ! உடனே திரும்பிவிடுவேன்!" இதை கூறிவிட்டு அவள் ஓடோடி மறைந்தாள். குருசிங்கதேவ் வாய்விட்டுச் சிரித்தான்!

★

பெண்புலி, பழத்தட்டுடனும், பால்செம்புடனும் குரு வீட்டை நோக்கிப் பதுங்கிப் பதுங்கிச் சென்றுகொண்டிருந்தாள். திடீரென அந்த நாட்டின் புதிய தானைத்தலைவன் அவள் முன்னே தோன்றினான்.

"யார்...அது?..."

....

"ஓகோ! அரச குமாரியோ! இந்நேரத்திலா? எங்கே பயணமோ?"

"உனக்கென்ன? நான் குருஜீ விட்டிற்கு செல்கிறேன்!"

தானைத் தலைவன் பதில் பேசாது அவ்விடம்விட்டு நகர்ந்தான். பெண்புலி, குருதேவ் சிங்கத்தை நாடி ஓடினாள்.

★

வேடன் விரித்திருந்த வலையிலே, அப்பொழுது அங்கே ஓடோடி வந்த மான் ஒன்று சிக்கித் தினறியது!

"முழுமதியின் அழகைக் கண்டாயா பெண் புலி! முழுமதியினுள்ளே கயல் இருப்பதை நீ கண்டிருக்கிறாயா? அதே முழுமதியினுள்ளே பவளத்தைப் போன்ற உதடுகளை நீ கண்டதுண்டோ?" காமத்தால் கண்ணிழந்த குருதேவன் கண்டபடி உளறினான். களங்கமற்ற பெண் புலியோ குருதேவின் பிடியிலே சிக்கித் தவித்தாள்!

"குருஜீ! தாங்கள் கூறுகின்ற கயலையோ, பவள வாயையோ என்னால்...சந்திரனில் காணமுடியவில்லை! ஆனால், ஏதோ ஓர் களங்கம் மட்டும் அந்த முழுமதியின் நடுவிலே இருக்கிறது!" குருஜீயின் காமாந்தகார இரும்புப் பிடியிலே சிக்கிய கன்னி கள்ளமில்லா உள்ளத்தோடு, வானத்திலே மிதக்கும் சந்திரனை நோக்கியவாறு கூறினாள்!

"களங்கமற்ற முழுமதியை நீ காணமுடியாது! கண்ணே! நான்தான் அதைக் காணமுடியும்! நான்தான் அதை முத்தமிடவும் முடியும்!" இதைக் கூறிவிட்டு, பாம்பு சந்திரனை விழுங்குவதாகக் கற்பனை செய்யப்பட்டதை நிரூபிக்கும் வகையிலே 'குருசிங்கதேவ் கேது' வானது, பெண்புலி மதியைத் தழுவி மறைத்தது!

"ஐயையோ! இது என்ன குருதேவ்!" அவளுடைய இந்த பயங்கர வார்த்தை கேட்ட புள்ளிமான் கூட்டங்கள் மிரண்டன! மிரண்டோடி வந்த மற்றொரு பெண் மானும் வேடன் விரித்திருந்த வலையிலே சிக்கித் தினறியது! குருதேவின் காமாந்தகாரச் செயலைக் காணச் சகியாத முழுமதிகூட மேகக் கூட்டத்தின் பின்னே ஓடி ஒளிந்துகொண்டது!

★

"...கற்பிழந்த அரசகுமாரி, இந்த நாட்டிற்கே ஓர் அவமானச்சின்னம்! எனவே அவளைப் பெட்டியிலே பூட்டி கடலிலே தூக்கி எரிந்துவிடுங்கள்! அரசகுமாரியைக் காப்பாற்றத் தவறிய குற்றத்திற்காக, அரண்மனை தானைத்தலைவனை இன்றிலிருந்து வேலையைவிட்டு நீக்கியுள்ளோம்!" நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்புக் கேட்ட எல்லோரும் அதிசயித்தனர்!

"கற்பிழந்த தன் மகளைத் தண்டித்த அரசர், அரசகுமாரியின் கற்பையழித்த குருதேவருக்கு மட்டும் தண்டனை அளிக்கவில்லையே ஏன்?" இந்தக் கேள்வியை தானைத்தலைவனைத் தவிர வேறு யாரும் கேட்கத் துணியவில்லை! இக்கேள்வியைக் கேட்டவுடன், அரசாங்கக் குருதேவ் துள்ளிக் குதித்தார்!

"என்ன வார்த்தை பேசினாய்! நாட்டின் குருதேவரையா அவமதித்தாய்! உன்னை இப்பொழுதே நாடு கடத்தியிருக்கிறோம்!

சிறிதுநேரத்திலே கடலலைகள் அந்த நாட்டின் அரசகுமாரி அடங்கியுள்ள பெட்டியை அடித்துச் சென்றன! அந்தப் பெட்டியைத் தேடியவாறு, தானைத்தலைவன் கடற்கரையோரத்திலே சென்றுகொண்டிருந்தான்!

★

அவமானம் தாங்கமுடியாமல்குரு சிங்கதேவ் அங்குமிங்கு மலைந்துகொண்டிருந்தார். அவர் உள்ளம் அவரைப் பலப்பல கேள்விகள் கேட்டது.

"இவ்வளவு நாள் பாடுபட்டு அவளுக்கு எல்லாக் கலையும் கற்பித்தாய்! கலைகளில் வல்ல கலைவாணியாக உருவாக்கினாய்! அவளை மணம் கமழும் மலராக்கி மகிழ்ந்தாய்! ஆனால் அந்தோ! ஓர் நொடியில் அந்த மலரைக் கசக்கி யழித்துவிட்டாயே! இது தகுமா?"

"நான் என்ன செய்வேன்? அவளின் அழகு என்னை கெட்டவனாக்கிவிட்டது! என்னுடைய இழிந்த காமம் என் கண்களைக் குருடாக்கிவிட்டது! ஐயோ! நான் அவளைத் திருமணம் செய்துகொள்ளவும் தயார்தான்! ஆனால் இந்தப் பாழும் சமூகம் ஒத்துக்கொள்ளாதே! அரச குமாரியை இந்த வேதப் பிராமணன் மணப்பதா? அதெப்படி முடியும்!

"ஆனால் அந்த அன்ன நடையாளை அநியாயமாகக் கடலலைகள் விழுங்குவதா? முடியாது! முடியாது!"

குருதேவ் வெறிபிடித்தவர்போல் ஓடினார்! கடற்கரை யோரமாக மாதக் கணக்காக அரச குமாரியின் பெட்டியைத் தேடிக்கொண்டே ஓடிக்கொண்டிருந்தார்! அரண்மனை அறுசுவை உணவினால் "மொழு மொழு!"வென வளர்க்கப்பட்ட அவரின் உடல் மெலிந்து வாடியது.

பெண்புலி! பெண்புலி!!" என்ற அவருடைய கதறல்களை கடலலைகள் எதிரொலித்தன.

குருதேவிற்கு முன்னால், தானைத்தலைவனும் ஓர் படகின்மீது, 'பெண்புலி'யைத் தேடிச் சென்றான். தன் மகளை மரப்பெட்டியில் இரக்கமின்றி வைத்துக் கடலில் விட்ட மன்னனும், தன் மகளைக் காப்பாற்றும் நோக்கத்தோடு மாறுவேடத்தில் வந்துகொண்டிருந்தான். அவன் அந்த நாட்டின் அரசன்தான்! ஆனால் அவன் குருதேவிற்கு அடிமை! கொடுமை செய்த குருதேவை அவனால் கண்டிக்க முடியாது! தன் மகளைத்தான் தண்டிக்க வேண்டும்! அந்த நாட்டிலே நிலவி வந்த அரசநீதி அப்படிப்பட்டது!

குருதேவ், தான் செய்த குற்றத்தை உணர்ந்தார்; தன்னிடத்தில் கல்வி கற்கவந்த ஓர் பெண்ணை அநியாயமாக கெடுத்து அவள் வாழ்க்கையையே பாழாக்கியதற்காக அழுது புலம்பினார்; அரசகுமாரியின் பெட்டியைக் காணும் வரையில், ஊண், உறக்கம் எதுவுமே கொள்வதில்லையென சபதம் செய்துகொண்டு, கடற்கரையெங்கும், பைத்தியம் பிடித்தவர்போல் அலைந்து திரிந்தார்.

கடைசியில் ஓர்நாள்! ஓர் பெட்டி கடலிலே மிதந்து வந்தது! அதைக் கண்ட குருதேவின் கண்கள் மகிழ்ச்சியால் ஒளி வீசின.

"கண்ணே பெண்புலி! இந்தக் காமுகனை மன்னித்து ஏற்றுக்கொள்வாயா? பெண்புலி!" என்று கூறிக்கொண்டே அரும்பாடுபட்டு அந்தப் பெட்டியை கரைக்கு இழுத்து வந்து பூட்டை உடைத்து பெட்டியைத் திறந்தார்.

அங்கே! பெட்டியுனுள்ளே! என்ன அது? அரசகுமாரிக்குப் பதில் அதனுள்ளே பசியுடன் காத்திருந்த புலி ஒன்று ஒரே தாவில் குருதேவின்மேல்பாய்ந்து அவரைக் கொன்றது.

— 8ம் பக்கம் —

இன்பபுரியான், பி. எஸ்சி., பி. டி.

மயிலாடும் பாறை

தென்னரசு

“இதை யார் கொண்டுவந்தால் என்ன! எனக்கு மல்லிகைப்பூ பிடிக்காது என்ருல் பிடிக்காதுதான்.” என்று செல்லமாக உதட்டைப் பிதுக்கிக்கொண்டு கூறினுள் ரஞ்சிதம்.

நட்டுவனுர் கங்கைமுத்து ரஞ்சிதத்தை விடுவதாக இல்லை.

“கண்ணு, இந்தப் பூ நம்ப இவர் கொண்டுவந்தார். அவர் பின்னுடியே வந்துகொண்டிருக்கிருர்” என்று அவளருகில் வந்து அவளது மடியில் போட்டார்.

மல்லிகைப்பூ அவளுக்கு மயக்கத்தையூட்டியது. ரஞ்சிதம் பூப்பந்தை எடுத்து வாசற் பக்கமாக வீசினுள். வீட்டுக்குள் வந்த குமரப்பரைக் குறிவைத்து எறிந்ததைப்போல், அவள் வீசிய மல்லிகைச்சுருள் குமரப்பரின் முகத்தில் விழுந்தது. ஆம், ரஞ்சிதம் பூப்பந்தைக் கோபமாக வீசுவதற்கும், குமரப்பர் ரஞ்சிதத்தின் வீட்டுக்குள் நுழைவதற்கும் சரியாக இருந்தது. ரஞ்சிதம் திகைத்துப்போனுள். முகம் வியர்த்துவிட்டது. கைகளைப் பிசைந்தாள், நட்டுவனுர் கங்கைமுத்து முகத்தை வேறுபக்கம் திருப்பிக் கொண்டார். நெஞ்சிலே முள் தைத்தவளைப்போல் ஒருகணம் துன்புற்ற ரஞ்சிதம், அடுத்த விநாடியே குளுமையையும் குறும்பையும் முகத்திற்கு வரவழைத்துக் கொண்டு ஆசைபொங்க பேசத்தொடங்கினுள்.

“எப்போது வந்தீர்கள்?... காயம் ஆறிவிட்டதா?...அன்று மன்னிப்புக் கேட்கக்கூட நேரமில்லை, என்ருல் உங்களுக்கு பெருத்த நஷ்டம்.”- தலைகுனிந்தபடி ரஞ்சிதம் பேசினுள்.

சவ்வாதுப்பொட்டு மணம் பரப்ப, ஜரிகைவேட்டியும், சந்தனவர்ணச் சட்டையும் கவர்ச்சியிட கழுத்திலே கனத்த தங்கச்சங்கிலியும், விரல்களிலே மோதிரங்களும் மின்ன ரஞ்சிதத்தைத் தரிசிக்க வந்த குமரப்பர் நினைவிழந்தவரைப்போல் பதில் பேசாமல் தடுமாறினுர். முதலாளியிடம் மன்னிப்பை எதிர்பார்க்கும் தொழிலாளியைப் போல் அவள் நின்ருள்; அறிந்த பள்ளிப்பாடத்தை ஆசான் கேட்கும்போது குழம்பி நிற்கும் மாணவனைப்போல் குமரப்பர் தோன்றினுர். நிலைமை நட்டுவனுருக்குப் புரிந்தது. ரஞ்சிதத்தின் அன்னை செங்கமலத்தின் காலத்திலிருந்து அவர் எத்தனை முகங்களைப் பார்த்திருக்கிருர், எத்தனை பேருடைய உறவுக்கும் முறிவுக்கும் காரண கர்த்தாவாக விளங்கி இருக்கிருர்! அவருக்கா குறிப்புத் தெரியாது! வேகமாக உள்ளே போய்விட்டுச் சிறிதுநேரம் கழித்து வெளியில் வந்தார் “வந்த காலோடு நிற்கிறீர்களே! உள்ளே போய் உட்காருங்கள். ஏம்மா, நீயும் இப்படியே நிற்கிருயே ஏன்? உனக்குக் கால் நோகவில்லையா?” என்ருர்.

ரஞ்சிதம் முன்னே சென்ருள். குமரப்பர் பின்தொடர்ந்தார்.

ஆடும் மயில் பொறித்த சதுரச் சலவைக்கற்கள் பதித்த அழகிய கூடம். ரத்தினக்கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. அதில் ஒரு வெள்ளித் தட்டில் துளிர்வெற்றிலை, காய்ந்த சருகுபோன்ற கொட்டைப்பாக்குச் சீவல், ரோஜாநிற வாசனைச் சுண்ணும்பு, ஏலக்காய்,கிராம்பு முதலியன வைக்கப்பட்டிருந்தன. பட்டுறை கொண்ட தலையணைகள் மூன்று இணைந்துகிடந்தன. சுவரில் அழகான படங்கள் - நிர்வாணப் படங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. அலையிலே மிதந்துவரும் வெண்சங்கைப்போல், எழில் ததும்பும் மாதரசிகளின் அரைகுறை அங்க சிருஷ்டிகளோடு கூடிய கவர்ச்சி மிகுந்த ஓவியங்கள் - அரபிக்குதிரையின் வாலைப்போன்ற கார் கூந்தல் கொண்ட கட்டழகுக் காரிகையை கை வண்ணத்தால் ஊஞ்சலில் அமர்த்தி, அழகுபார்த்த ரவிவர்மாவின் அற்புதமான சித்திரங்கள் அந்த அறையை அலங்கரித்தன. ஒரு பக்கம் துரௌபதை துயில் இழக்கும் படம்! இன்னொரு பக்கத்தில் மேனகை கொடுத்த கனியன்ன குழந்தையை,முனிவர் விசுவாமித்திரர் வேண்டாமென்றுரைக்கும் காட்சி விளக்கம்! அந்த அறை கருத்தைக் குழப்பி, பருவத்திற்கு அறை கூவல் விடும் சல்லாப மண்டபமாக விளங்கியது.

முன்னே சென்ற ரஞ்சிதம் கம்பளத்தருகே போய் திரும்பிப் பார்த்தாள். அந்தப் பார்வை, குமரப்பருக்கு வரவேற்பிதழை வாசித்தளித்து, அமரும்படி கட்டளையிட்டது. குமரப்பர் அமர்ந்தார். பக்கத்தில் அவள் அமர்ந்தாள். வெளியிலே இருந்தபடி நட்டுவனுர் கங்கைமுத்து “போய் வரட்டுமா ரஞ்சி!” என்று கூவினுர். “இரவு சாப்பாட்டுக்கு வந்துவிடுங்கள்” என்று ரஞ்சிதம் அறையில் இருந்தபடியே சொன்னுள்.

குமரப்பருக்கு இதெல்லாம் புதிது. பணக்காரர்களின் விருந்துகளில் கலந்து பழரசம் சுவைத்துப் பரம்பரை கௌரவத்தைக் காத்துவந்த குமரப்பர், அப்போதுதான் முதன் முதலாக அறிமுகமாகாத ஒரு வீட்டுக்குப் போயிருக்கிருர். வெற்றிலைபாக்குப் போட்டால் மாடு முட்டும் என்று சின்னக்குழந்தையாக இருக்கும்போது அவரது அன்னையார் பயமுறுத்தியதை அவர் மறக்கவில்லை. ரஞ்சிதம் வெற்றிலையை மடித்து அவர் கையிலே கொடுக்கும்போது, குமரப்பர் அன்னையின் அன்றைய மிரட்டலை எண்ணிப்பார்த்தார். நாட்டுவைத்தியர் கொடுக்கும் மருந்தை, முகத்தைச் சுழித்துக்கொண்டு சாப்பிடும் நோயாளியைப்போல் அவள் கொடுத்த வெற்றிலை மடிப்பை குமரப்பர் வாயில் அதக்கிக்கொண்டார். ரஞ்சிதத்திற்கு அது வேடிக்கையாக இருந்தது. மெல்லச் சிரித்தாள். புடவையால் வாயைப் பொத்திக்கொண்டாள்.



தொடர்ச்சி

“ஏன் சிரிக்கிருய்?” ரகசியமாகக் கேட்டார் குமரப்பர்.

“நீங்கள் பயப்படுவதைப் பார்த்துச் சிரிக்கிறேன்” என்ருள் ரஞ்சிதம்.

அவர்கள் பேச்சையும் நடையுடைகளையும் யாரோ சிலர் ஒளிந்திருந்து பார்த்துக் கொண்டிருப்பதைப்போல் இருவரும் நடந்துகொண்டார்கள். காற்று சில்லென்று வீசியது.

“ரஞ்சிதம்!”

“இ...ம்!”

“தாசி வீட்டுக்கு இதுதான் எனக்கு முதல் தடவை. நான் பயப்படுகிறேன்.”

“இது தாசிவீடல்லவே! என் தாயார் தாசி. என் பாட்டி தாசி! நான் தாசியல்ல. அப்படி இருக்க நான் விரும்பவில்லை. தாசித்தொழிலைச் சிலர் வருவாய்க்காக நடத்தினுர்கள். வேறுசிலர் குலத்தொழிலாக மதித்தார்கள். அதனுல் தாசிப்பெண்கள் யாருடைய தனிப்பட்ட அன்புக்கும் பாத்திரமாக முடியவில்லை; தாசிப் பெண்களுக்கும், தனிப்பட்ட யார் மீதும் பற்று, பாசம் இருந்ததில்லை.”- ரஞ்சிதம் வார்த்தைகளைத் தொடுத்துக்கொண்டே போனுள்.

“இவ்வளவு சின்ன வயதில் இதெல்லாம் எப்படி உனக்குத் தெரிந்தது?”

“கல்லாமல் குல வித்தை பாதி என்பார்களே, அது உங்களுக்குத் தெரியாதா? தாசிகளின் உடல்மட்டும் கெட்டுவிடுவதில்லை. இருதயமும் பாழாகிவிடுகிறது. அவர்களுக்கு யார் மீதும் இரக்கம் பிறப்பதில்லை. மனப்பூர்வமாக அவர்கள் மற்றவர்களை நேசிக்கமுடியாது. ஒரு தினத்திற்கு ஒரு சிறு பகுதியை வேடத்திற்கு ஒதுக்கினுல் இருதயம் கெடுவதற்கு வழியில்லை. எந்த நேரத்திலும், இருதயத்தை அதனது இருப்பிடத்திலிருந்து மாற்றிக்கொண்டே இருக்க வேண்டுமானுல் இருதயம் கெடுவதைத்தவிர வேறு வழியில்லை.முதல் நாள் தன்னுடைய இல்லத்தில் பன்னீர் தெளித்துப் பரிமள கந்தம் பூசி

வரவேற்கப்பட்டவரை, மறு நாள் தெருவிலே பார்த்தால் ஒரு அந்நியனைப் பார்ப்பதைப்போல் பார்த்துவிட்டுப் போவார்கள் தாசிகள். அந்த வாழ்க்கையையா நான் பின்பற்றுவேன்! எனக்கு என் தாயார் தேடி வைத்த சொத்து இருக்கிறது. நானாக உடம்பை வளைத்துக்கற்றுக்கொண்ட ஆடற் கலை இருக்கிறது. யார்என்னை நம்புகிறார்களோ, அவர்களோடுநான் வாழ்க்கை நடத்துவேன். பொன்னும் பொருளும் எனக்குத் தேவையில்லை. கண்ணுக்கு நேரான கணவன் வேண்டும். அவரை மகிழ்விக்க எனக்குத் தெரியும். ஆனால் என்னை மகிழ்விக்க அவர் தெரிந்துகொண்டிருக்க வேண்டும்.''

—இனிய குரலில், வீணை வாசிப்பதைப்போல் ரஞ்சிதம் மூச்சுவிடாமற் பேசிக்கொண்டே போனது, குமரப்பருக்கு ஒரு புதிய ஏட்டைப் படிப்பது போன்று இருந்தது.

இருவரும் பேசிக்கொண்டே இருந்தார்கள். நேரம் இருண்டுவிட்டது. பக்கத்தில் இருந்த குமரப்பரின் முகம் இருட்டில் மறைந்த பிறகுதான் விளக்கு ஏற்ற மறந்ததை அவள் நினைத்துக்கொண்டாள். வீட்டின்இன்னொரு பகுதிக்குப் போய் விளக்கேற்றிக்கொண்டு வந்தாள். அது மெழுகு திரி விளக்கு. திரி இளகுவது போல் இரண்டு உள்ளங்களும்இளகி ஓடிக்கொண்டிருந்தன.

''சாப்பிட வேண்டாமா? மீன் குழம்பு!'' ரஞ்சிதம் அழைத்தாள்.

''தேவைப்படும்போதெல்லாம் திருமயத்தில் மீன் கிடைக்குமா?''

''நல்ல மீன்கள் எப்போதாவதுதான் கிடைக்கும். இன்றைக்குக்கூட நம் வீட்டில் கெழுத்தி மீன் குழம்பு! உபாத்தியாயர் தேடிப் பிடித்து வாங்கிக் கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார். இப்போதுதான் எனக்கு சமையற்காரி சொன்னாள். இம்! எழுந்திருங்கள்'' என்று அவர் கையைப் பிடித்துத் தூக்கினாள். இடித்துப் பிசைந்த மாவைத் தொடுவதுபோல் அவள் கரம் குமரப்பருக்கு அவ்வளவு மெதுவாக இருந்தது. பிடித்த கரம் பிடித்தபடி இருவரும் உள்ளே போனார்கள்.

பொழுது புலர்ந்தது. ஓடிக்களைத்த நண்டுகள், ஆற்று மணலில் புதையுண்டு கிடப்பதைப்போல், பட்டு மெத்தையில் அந்த இளம் ஜீவன்கள் இரண்டும் சுருண்டு கிடந்தன.

நட்டுவனார் கதவைத் தட்டினார். குமரப்பர் கதவைத் திறந்தார்.

''அதிகாலையில் போக வேண்டும் என்றீர்களே! குதிரை தயார். வாசலில் நிறுத்தியிருக்கிறேன்.'' என்றார் நட்டுவனார். ரஞ்சிதம் அயர்ந்து கிடந்தாள். மல்லிகைப் பூக்கள் உதிர்ந்து விதைத்துக் கிடந்தன.

''ரஞ்சிதம் இன்னும் எழுந்திருக்கவில்லையே! சொல்லிவிட்டுப் போக வேண்டாமா?'' என்றார் குமரப்பர்.

நட்டுவனார் ரஞ்சிதத்தைத் தட்டி எழுப்பினார். அவள் அவரதுகையைப் பற்றி கன்னத்தில் வைத்துக்கொண்டாள். நட்டுவனாருக்கு அவள் உள்ளம் புரிந்தது. எண்ணம் தெரிந்தது. மனதுக்குள்ளேயே சிரித்துக்கொண்டார்.

''ரஞ்சி விழித்துப் பாரேன். எங்கே கண்ணைத்திற!'' என்று செல்லமாகக் கேட்டார் நட்டுவனார்.

ரஞ்சி விழித்தாள். நட்டுவனாரின் கையை அவள் பிடித்துக்கொண்டிருப்பது அப்போதுதான் தெரிந்தது. 'குபுக்' என்று சிரித்துவிட்டாள். தேக்குமரப் பதுமை போலிருந்த அவள், தோகை வர்ணப்புடவை உடுத்திக்கொண்டு வீட்டு முகப்புவரை வந்து வழியனுப்பினாள்.

★

நட்டுவனார் குமரப்பரோடு ஊர்க் கடைசிவரை பேசிக்கொண்டு போனார். குதிரை, ரஞ்சிதத்தைப் போல் மெதுவாக நடந்துசென்றது.

நட்டுவனார் குமரப்பரைவழியனுப்பிவிட்டு வீடு திரும்புகையில், அவர் முகத்திலே உற்சாகமில்லை. பிரபு வீட்டுச் செல்லப் பிள்ளை தன்னுடைய ரஞ்சிதம் வீட்டுக்கு வந்ததுபற்றிப் பெருமையாக நினைத்து நினைத்துப் பூரித்தவர் மனதில் மலர்ச்சி இல்லை. ரஞ்சிதம் கொடுத்து வைத்தவள், வாழப் பிறந்தவள்,இங்கிதம்தெரிந்து நடந்துகொள்வாளானால் மங்கள வாழ்க்கைப் பெறுதல் நிச்சயம்–என்று முதல்நாள் இரவு முழுதும் பெருமை அடித்துக்கொண்டிருந்தார். ஆனால் அவர் குமரப்பரை வழியனுப்பிவிட்டு வரும்போது அந்தமனக்கோட்டைகள் தவிடுபொடியாகச் சிதறிப் போயிருந்தன. ஏன்? மஞ்சுவிரட்டில் பிடிபட்ட மாட்டைப்போல் தலையைத் தொங்கவிட்டுக்கொண்டு வீட்டுக்குள் நுழைந்தார்.

ரஞ்சிதம் குளித்து முழுகிக் கூந்தலைக் கோதிக்கொண்டிருந்தாள்.

நட்டுவனாரைக் கண்டதும் ஆவலோடு அவரருகில் வந்தாள்.

''போய்விட்டாரா? எப்போது வருவதாகச் சொன்னார்? குதிரை மறைந்த பிறகுதானே வந்தீர்கள்! என்ன சொன்னார்? உபசரிப்பில் குறை சொல்லவில்லையே!'' என்று அடுக்கிக்கொண்டே போனாள் ரஞ்சிதம்.

நட்டுவனார் பதில் ஒன்றும்பேசவில்லை, • அவர் கண்கள் கலங்கின. புருவங்கள் துடித்தன.

''குறை சொல்லவில்லை. உனது வரவேற்பிலே அவருக்கு அளவு கடந்த திருப்தி. ஒரு தாசிவீட்டில் இவ்வளவு முறையோடு காரியம் நடப்பது ஆச்சரியப்படக்கூடியது என்றார். உனக்கு இவ்வளவு சொத்து இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லையாம். நீ ஜமீன்தாரினியைப்போல் வாழ்க்கை நடத்துகிறாயாம். மனதில் பட்டதை யாருக்கும் பயப்படாமல் தெரிவிக்கிறாயாம்! உன்னுடைய குழைவும், நெளிவும் கூனிக் குறுகிப் போன கிழவனையும் நிமிர்ந்து பார்க்க வைக்கிறதாம். நீ பேரழகியாம்!'' படிப்படியாகச் சொல்லிக்கொண்டே போனார் நட்டுவனார்.

''அவ்வளவுதானா? அப்புறம் என்ன சொன்னார்? அன்றைய ஆட்டத்தைப்பற்றிச் சொன்னாரா?''

''சொன்னார்! ரஞ்சிதம் இந்திர லோகத்தில் பிறக்க வேண்டியவள் என்று சொன்னார்.''

ரஞ்சிதத்திற்கு மயிர் சிலிர்த்தது. ஒருதரம் உடலைத் தடவிக்கொண்டு தனக்குத்தானே கரகோஷம் செய்து கொண்டாள்.

நட்டுவனாருக்குத் துக்கம் தாளவில்லை.

''ரஞ்சிதம்!'' என்று உரக்கக் கத்தினார்.

ரஞ்சிதத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது. இவ்வளவு நேரம் நட்டுவனார் சொன்னதெல்லாம், வெறும் பொய் என்று அவள் நினைத்துவிட்டாள்.நட்டுவனாரையே கூர்மையாகப் பார்த்தாள். நட்டுவனாரின் கண்கள் பனிபடர்ந்த ரோஜாமலரைப்போல்

அடுத்த இதழில் ஆரம்பமாகிறது!

★

ஆசிரியர்,

கண்ணதாசன்

எழுதும்

ஊமையன் கோட்டை

மறக்குல மாட்சி கீர்த்திபெற்று விளங்கிய காலத்தில் நடந்த உருக்கமான காதல் கதை!

நனைந்திருப்பதை அப்போதுதான் கண்டாள்.

"ரஞ்சிதம்! நீ துள்ளிக்குதித்து விளையாண்ட காலத்திலிருந்து பழகிய அற்புதமான கலையை, அவர் மதிக்கவில்லை. நாடு புகழ்கிறது உன் ஆட்டத்தைக் கண்டு. நடன சிங்காரி என்று தமிழகம் பாராட்டுகிறது. ஆனால் குமரப்பர், அதை மதிக்கவில்லை ரஞ்சி!"–நட்டுவனார் தேம்பித் தேம்பி அழுதார்.

"ஐயா! என்ன சொல்கிறீர்கள். மூடி மறைத்துப் பேசி என்னைச் சித்திரவதை செய்யாதீர்கள். ஆடிப் புகழ் பெற்றேன். தாசி என்று எண்ணித் தேடி வந்தவர்களையெல்லாம், ஓடிப் போங்கள் என்று திருப்பி அனுப்பினேன். என்னுடைய ஆட்டம் குமரப்பருக்குப் பிடிக்கவில்லையா? என்னைக் காட்டிலும் ஆடற்கலையில் வல்லவளை அவர் சந்தித்திருக்கிறாரா? நீங்கள் வாயை மூடிக்கொண்டிருந்தீர்களா? உங்களுக்குத்தானே இந்த அவமானம்! அரங்கு அமைத்து அந்தச் சித்திராங்கியை அங்கே அழைத்து வரச் சொல்லாமலா வந்தீர்கள்!" ரஞ்சிதம் வெடித்துப் பேசினாள்.

"ரஞ்சிதம்! புரியாமல் பேசாதே! அவர் உன்னைப்போல் அகிலத்தில் ஆட்டக்காரி இல்லை என்கிறார். இனிப் பிறக்கவும் முடியாதென்கிறார். அவளுக்கு ஆட்டம் கற்பித்த உங்களுக்குச் சிலைகூட வைப்பேன் என்கிறார். ஆனால்!"

"ஆனால் என்ன! ரஞ்சிதம் இனிமேல், அரங்குகளிலே ஆடக்கூடாதென்கிறார். கோயில் திருவிழாக்களில் சதிர் கூடாது என்கிறார். கோயில் மானியத்தை இழக்கச் சொல்கிறார். இல்லையா?"

நட்டுவனாருக்குத் தலைவெடித்து விடுவதுபோலிருந்தது. கண்களை விரித்துப் பார்த்தார்.

"ஆம் ரஞ்சிதம்! நீ ஆடக்கூடாதாம்! வீட்டுக்குள் ஆடி அவரை மகிழ்விக்கத்தான் இனி உன் ஆட்டம் பயன்பட வேண்டுமாம்! வீதிக்கு வந்தால் அவருக்குப் பிடிக்காதாம்! நீ இதற்கு :உடன்பட்டால் அவர் உன்னைத் துணைவியாக்கிக்கொள்ளத் தயாராம்! சொத்துச் சுகத்தையெல்லாம் உன் பெயருக்கே எழுதி வைப்பாராம்! மாளிகை எழுப்புவாராம்! இல்லாவிட்டால்......!"–நட்டுவனார் தேம்பித் தேம்பி அழுதார்.

"இல்லாவிட்டால்!.....இல்லாவிட்டால்?"

"வரமாட்டார். கலை உன்னோடு! புகழ் உன்னோடு! அவரும் அவர் பணமும் அவரோடு! அவ்வளவுதான்!"

"அவ்வளவுதான்! அவ்வளவுதான்! என் வாழ்க்கையும் அவ்வளவுதான்!" தலை தெறிக்கக் கதறினாள் ரஞ்சிதம்.

"ரஞ்சிதம்!"

"ரஞ்சிதம்தான் பேசுகிறேன். மன்னிக்க வேண்டும். கலை கற்றேன். அதனால் புகழ்பெற்றேன். மணம் பெற்றேன். செல்வம் இருக்கிறது சாகும் அளவிற்கு! நான்காசுக்காகத் தெருக்களில், கோயில்களில் ஆடத்தான் வேண்டுமா? அழகு மின்னும் பருவத்தில், ஆடிக்கொண்டே இருந்தால் என் வாழ்க்கை என்னாவது? பொருள் சேர்ப்பதல்ல வாழ்க்கை! புகழ் சம்பாதிப்பதற்கல்ல பெண்கள் பிறந்தது! வாழ வேண்டும்!"

"ரஞ்சிதம்! உனக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதா?"

"வாழ வேண்டும் என்ற ஆசை வந்துவிட்டது"

"கலையை வாழ வைக்கும் பணக்காரனை நான் தேடித் தருகிறேன்"

"பணக்காரன் எனக்கு வேண்டாம். எனக்குக் கணவன் வேண்டும். ஊருக்கு அளிக்கும் கலையை, என் கணவருக்குமட்டும் நான் அளிக்கத் துணிந்துவிட்டேன்."

"ரஞ்சிதம்! எனக்குத் துரோகம் நினைக்கிறாய்!"

"இல்லை, தங்களை இருந்தது இருந்தபடி சுகமாக வாழ வைக்க நினைக்கிறேன்"

"சண்டாளி!" என்று கதறி 'பளார்' என்று அவள் கன்னத்தில் அறைந்தார் நட்டுவனார்.

"ஐயோ!" என்று கதறி கதவில் போய் மோதினாள் ரஞ்சிதம்.

கண்ணாடிக் கிண்ணத்தைப்போல் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்ட ரஞ்சிதம், இப்படி ஒரு நாளைக்கு தன்னாலேயே அடித்து வீழ்த்தப்படுவாள் என்று, நட்டுவனார் எதிர்பார்க்கவில்லை.

"துரோகி. பத்து வருஷங்களாக பாடுபட்டுச் சொல்லிக்கொடுத்த குருவையே, நீ அவமதிப்பதென்றால் உனக்கு எவ்வளவு திமிர் இருக்கும்... நன்றிகெட்டவள்! ரஞ்சிதம்! நீ வாழ மாட்டாய். தாசிகளின் இறுதிக்காலம் ஊசிப்போன பதார்த்தத்தைப்போல் நாறாமல் போகாது என்பார்கள். நீயும் அப்படித்தான் போகப்போகிறாய்" என்று கர்ஜித்தார் கங்கைமுத்து. சொத்தை இழந்தவரைப்போல் அவர் துடித்தார்.

அப்போது முகப்புக்கதவு தட்டும் சத்தம் கேட்டது. நெற்றியில் வடிந்த ரத்தத்தைத் துடைத்துக்கொண்டே கதவைத் திறந்தாள் ரஞ்சிதம்!

"ஆ! அத்தான்!" என்று கதறினாள்.

குமரப்பர் பலத்த ரத்தக்காயத்தோடு ஒரு வண்டியில் இருந்து தூக்கி வரப்பட்டார்.

(தொடரும்)

★ ★ ★

—5-ம் பக்கத் தொடர்ச்சி—

"ஐயையோ! அரச குமாரி! உனக்கு 'பெண் புலி'யென்று பெயர் சூட்டினேன்! நீ உண்மையிலேயே பெண் புலியாக மாறிவிட்டாயே! என்னை மன்னித்துவிடு என்னைக் கொல்லாதே ஐயையோ! ஐயையோ! பெண்...பு...லி!" என்று கதறிக்கொண்டே செத்து விழுந்தார்.

சிறிது நேரத்தில் நாடு கடத்தப்பட்ட தானைத்தலைவனும், அரச குமாரியும் உல்லாசமாக பாடிக்கொண்டே அங்கு வந்தனர்.

"நயவஞ்சக குருதேவிற்கு நானளித்த தண்டனை எத்தகையது பார்த்தாயா பெண் புலி?" என்று தானைத் தலைவன் கேட்டான்!

"பிரமாதம்! பிரமாதம்! தானைத் தலைவா! நாடு கடத்தப்பட்ட பிறகும் நீ உன் கடமையைச் செய்துவிட்டாய்! அரசனாகிய நான் செய்ய முடியாததையும் நீ செய்து காட்டிவிட்டாய்! உன் செயலுக்கு உன்னைப் பாராட்டுகிறேன்! என் கண்மணி பெண் புலியைமட்டும் கண்மணி போல் பாதுகாப்பாயாக!" என்று கூறிக்கொண்டே மறைந்திருந்த மன்னனும் மறைவிடத்திலிருந்து வெளி வந்தான்! தன் தந்தையைக் கண்ட பெண்புலி, "அப்பா! என்னை மன்னித்துவிடுங்களப்பா!" என்று கூறிக்கொண்டே தன் தந்தையின் பாதங்களில் வீழ்ந்து கண்ணீர் சிந்தினாள். தன் மகளை கண்ட மன்னன் மகிழ்ச்சிப் பெருக்கால் உவகை யெய்தினான்!

★

—3ம் பக்கத் தொடர்ச்சி —

வாங்கி வாசித்து பாராட்டியிருக்கின்றனர். இலங்கையில் பிரபலமான "சிலுமின" என்ற சிங்களப் பத்திரிகையில், 1-ம்தேதி, ஜூன் மாதம் ஞாயிற்றுக்கிழமை "புதிய புத்தகங்கள்" என்ற தலைப்பில் "விடிநம்பி ஆராய்ச்சி" என்பவர் புகழ்ந்து விமர்சனம் செய்திருக்கிறார். புத்தகத்தின் மேலட்டையில் "ஆசிரியர் அப்பாதுரை என்றும் மொழிபெயர்ப்பு ஆசிரியர் விக்ரம சிங்க" என்றும் போடப்பட்டிருக்கிறது.

இதிலிருந்து தாங்கள் அறிவீர்கள் தங்கள் புகழ் இலங்கையில் சிங்கள மக்களிடம் எவ்வளவு தூரம் பரவியிருக்கிறது என்பதை. இதுமட்டுமல்ல இலங்கையில் உள்ள எண்ணற்ற பல வாசகர்கள், தங்கள்வாழ்க்கை வரலாற்றை அறிய ஆவல் மேலிட்டவண்ணம் இருக்கிறார்கள். ஆதலால் தாங்கள் தயை கூர்ந்து, தங்கள், வாழ்க்கை வரலாற்றை தமிழில் எனக்கு எழுதியனுப்பினால் போதும். இதனால் தமிழகத்துப் பெரியாரைப்பற்றி இன்னும் நன்றாக சிங்கள மக்கள் அறிந்துகொள்வார்கள். மறுத்துரைக்காமல் இப்பணியை செய்து தர வேண்டும். அத்துடன் தங்கள் உருவப்படத்தையும், அனுப்பி வைக்கவும். இலங்கையின் பிரபல சிங்கள தினசரி பத்திரிகைகளான, தினமின, லங்காதிப, ஜனதா, இப்பத்திரிகைகளில் ஒன்றில் தங்கள் வாழ்க்கை வரலாற்றை எழுதுகிறேன்.

மேலும் "பன்மொழிப் புலவர்" என்ற பட்டம் பெற்ற தங்களுக்கு சிங்கள மொழியும் தெரியுமா? இவைப்பற்றி தெளிவாக எழுதுங்கள். தாங்கள் இதுவரை தமிழ், ஆங்கிலம் உள்பட வேறு மொழிகளிலும், எத்தனை நாவல்கள், நாடகங்கள், சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், எழுதியிருக்கிறீர்கள்? தங்களுக்கு தற்போது வயது என்ன? இவைகளைப்பற்றி அறிவிக்கவும். தாங்கள் "தென்றலில்" "இதுதான் திராவிட நாடு" என்ற கட்டுரையை அழகாக எழுதியிருக்கிறீர்கள். "கேள்விப் பெட்டி" அறிவுக் களஞ்சியமாய் விளங்குகிறது. "முல்லை"யில் வெளி வந்த தங்களின் கட்டுரைகளும், தற்போது வெளி வந்துக்கொண்டிருக்கும் "அராபிய வீரன்" தொடர் கதையும் சிறந்து விளங்குகிறது.

தாங்கள் சார்ந்திருக்கும் தி. மு. கழகத்தின் கொள்கைகளை நான் மனதார விரும்புகிறேன். "அறிஞர் அண்ணா"வின் அறிவோடு அமைத்த இக்கழகம் உலகம் பூராவும் வளர்ந்து, செழிக்க வேண்டும் என்பதே என் அவா.

மேலும், அண்மையில் இலங்கையில் நடந்த மொழிக் கலவரத்தைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். சில பொறுப்பற்றவர்கள் செய்ததின் காரணமாக நடந்தது இக்கலவரம். ஆனால் இதை, எல்லாச் சிங்களவர்களும், வரவேற்கிறார்கள் என்று நினைக்க வேண்டாம். தமிழும், சிங்களமும், கலந்து உறவாட வேண்டுமென்பது பலருடைய அவா. இதையே நானும் விரும்புகிறேன். மனிதனாக பிறந்த யாரும், யாருக்கும் அடிமைப் படக்கூடாது. இலங்கையிலிருந்து சிங்களவர்களுக்கு எதிராக வரும் பொய் வதந்திகளை நம்பாதீர்கள். வாழ்க தமிழ். சிங்கள உறவு!

"நெணருவன்", கொழும்பு-13.

இவர் தான்

எம். ஜி. ஆர்.

★

6-9-58ம் தேதிய இதழில் ஆரம்பமாகிறது

★

★ கழக எழுத்தாளர்கள் பலர் புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களின் கலைத்தொண்டினைப் பல கோணங்களினின்று விமர்சனம் செய்கிறார்கள்.

★ அதனைத் தொடர்ந்து ராஜம்-மணாளன் எழுதும் கட்டுரை வெளிவரும்.

★

தென்றல் :: சென்னை-6.

இராமர் காவியம் திராவிடர் காவியமா?

வடமொழியில் எழுந்த முதற் தொடர்நிலைச் செய்யுள் வான்மீகி இராமாயணமாகும். வடநாட்டின் மன்னனான இராமனுக்கும், தென்னிலங்கை வேந்தன் இராவணனுக்கும், நடந்த போராட்டமே இராமாயணம். கங்கைக் கரையும், காவிரிக்கரையும், ஒன்றோடொன்று மோதிக்கொண்ட நிகழ்ச்சியே அதன் கருப்பொருளாய் விளங்குவது.

பண்டிதநேரு, "தந்தை மகளுக்கு எழுதிய கடிதங்கள்" என்ற நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார் :

"இராமாயணம், இலங்கை வேந்தன் இராவணனுக்கும், இராமன், சீதை இவர்களுக்கும் இடையில் நடந்த போராட்டத்தைக் குறிக்கும் கதையாகும். இலங்கையை இப்பொழுது சிங்களம் என்று அழைக்கிறார்கள்..."

நைல் நதி தீரத்திற்கும், யூப்ரிட்டிசு, டைகிரீசு ஆறுகள் பாயும் பிரதேசத்திற்கும், யாங்டிசு கரை மக்களுக்கும், ஏன்-சிந்து, கங்கை சமவெளிக்கும், நாகரிகத்தை அள்ளி வழங்கிய வைகை, காவிரிக்கரைகள், இழிவுபடுத்தப்பட்டிருக்கின்றன-அந்த காவியத்தில்.

கடல் கூவியழைத்ததால், கிரேக்கத்திற்கும் யவனத்திற்கும், கலம் மிதந்து வாணிகம் நடாத்தியவன் திராவிடன். வெள்ளையர்கள், "தேம்ஸ்" நதிக்கரையில் மீன் பிடித்துக்கொண்டிருந்த காலத்தில், கலைக்கூடங்களும், நாடக அரங்குகளும், சிற்பசித்திரச் சாலைகளும், இசைக்கூடங்களும் கண்டு நாகரிகத்தின் உச்சியில் வாழ்ந்தவன் திராவிடன்.

ஆங்கிலப் பாராளு மன்றத்தின் "அண்ணா" என்று போற்றப்படும், "எட்மண்ட் பர்க்" என்பான் கூறுவதைக் கேளுங்கள் :

"அவர்கள் கலை பயின்றவர்கள். சிற்பமும் சித்திரமும், ஆடலும், பாடலும், அவர்களுக்கே சொந்தம். நாம் காடுகளில் வாழ்ந்துகொண்டிருந்தபோது அவர்கள் நாகரிகத்தின் இமயத்தில் வாழ்ந்தார்கள்."

"தமிழர் பண்பாடு" என்ற கட்டுரையில், பி. சே. தாமசு என்பார், பாராண்ட தமிழர்களின் பண்டையப் பெருமைகளைப் படம் பிடித்துக் காட்டுகிறார் :

"தென்னிந்தியத் துறைமுகங்களுக்கும், அலக்சாந்திரியா துறைமுகத்திற்கும் நடந்த வாணிகம் உச்சநிலையை அடைந்திருந்தது.

"நல்ல மிளகு, அகில், சந்தனம் முதலியவைகளை விற்பனை செய்யும் சந்தையாக ரோம நாட்டை உபயோகித்தார்கள், தமிழர்கள். ரோமாபுரி ராணிகளுக்கு, மயில், கிளி, குரங்கு இன்னபிற வேடிக்கைப் பிராணிகளை அனுப்பி, தமிழர்கள் பசும் பொன்னை விலையாகப் பெற்றார்கள். அரசாங்க ஊர்வலங்களுக்கான யானைகள், தமிழ்நாட்டிலிருந்தே சென்றன. இவைகளைத் தாங்கிச் செல்லும் கலங்கள், பெரிய பட்டினமே கடலில் வளர்ந்து செல்வதுபோல் மிதந்து செல்லும். இதனால் ஏற்பட்டப் பொருளாதார சீர்கேட்டைச் சரிகட்ட இயலாமல் ரோமநாட்டு, அரசாங்கம் திண்டாடியது. பெரியதொரு கேள்விக் குறியே இதன் அடிப்படையில் அங்கு எழுந்தது."

இங்ஙனம், சீரும் சிறப்புமாக வாழ்ந்த திராவிடனை, குரங்குகளாகக் காட்டுகிறார் வான்மீகியார். கலைச் செம்மல்கள், கல் தூக்குகிறார்கள்-உரோமம் அடர்ந்த உடலும், வாலும், தலையும், கூனியிருக்கும் முதுகும், கொண்டு காட்சியளிக்கிறார்கள் !...

பண்டித நேரு "தந்தைமகளுக்கு எழுதிய கடிதங்கள்" என்ற நூலில் தெளிவாகக் குறித்து வைத்திருக்கிறார்:—(பக்கம்-25)

"தெற்கு நோக்கிச் செல்லச் செல்ல மக்கள் கறுப்பு நிறமுடையவர்களாக இருக்கிறார்கள். சென்னையிலும், இலங்கையிலும் மக்கள் கறுப்பாக இருப்பதை நீயே பார்த்திருக்கிறாய்" அவரே, இன்னொரு இடத்தில் குறிப்பிடுகிறார்:—

"இன்றுகூட தென்னிந்தியாவில் வாழும் மக்களில் பெரும் பகுதியினர் திராவிடர்களின் வழித்தோன்றல்கள். அவர்கள் வடவர்களைவிட கருமை நிறமுடையவர்கள்" அதே புத்தகத்தில் வேறொரு இடத்தில் இவ்வாறு எழுதியிருக்கிறார்:—(பக்கம் 75)

"இராமாயணத்தில், குரங்குகள் இராமனுக்கு உதவி செய்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. குரங்குகளின் தலைவனாக விளங்கியவன் அனுமான். தென்னிந்தியாவில் வாழ்ந்த மக்களே குரங்குகளாக காட்டப்பட்டிருக்கிறார்கள்"

தென்னகத்தில், வாழ்ந்து, வளர்ந்து புகழ் பரப்பிய இனம். அவர்கள் வளர்த்த நாகரிகமே, உலகத்தின் தலையான நாகரிகமாகக் கருதப்படுவது. அவர்கள் வழித்தோன்றல்கள் தான் இன்னும் தென்னகத்தில் வாழ்ந்து வருகிறார்கள். ஆரியக்கலப்பு நிகழ்ந்த காலத்தும், திராவிடர்கள், திராவிடர்களாகத்தான் வாழ்ந்தார்கள்.

"இந்தியாவில் அக்காலத்தில் வசித்துவந்த மக்கள் திராவிடர்கள். தென்னிந்தியாவில், குறிப்பாகச் சென்னை மாவட்டத்தைச் சுற்றி வசிப்பவர்கள் - ஆதித்திராவிடப் பெருங்குடி மக்களின் வழி வந்தவர்கள்..."

வேறு யாருமல்ல கூறுவது; பண்டித நேருவே கூறுகிறார். ஆனால் இன்றல்ல; இருபது வருடங்களுக்கு முன்னால்.

நினைவில் வைத்து கொள்ள வேண்டுகிறோம் ! தென்னகத்தில் வாழ்பவர்கள் கருப்பு நிறமுடையவர்கள். இவர்கள், முன்பு இந்தியா முழுவதும் பரவி இருந்த திராவிடர்களின் சந்ததிகள். அந்தக் கருப்பு நிறமக்களே, இராமாயணத்தில், இராமனுக்கு உதவிசெய்த குரங்குகளாக தோற்றமளிக்கிறார்கள். முன்பு வசித்த திராவிடர்களின் வழித்தோன்றல்கள் இன்றும் தென்னிந்தியாவில் வசித்து வருகிறார்கள். ஆகையால் இன்று தென்னிந்தியாவில், குறிப்பாக சென்னையைச் சுற்றி உள்ள பிரதேசங்களில் வாழ்பவர்கள் ?

வேதகாலத்தில் ஆரியர்கள் வட இந்தியா முழுவதும், பரவி இருந்தார்கள். திராவிடத்தின் நுழைவு வாசலைக் கடந்து, தென்னகத்திற்குள் அவர்களால் பரவ முடியவில்லை. விந்தியத்திற்கும், இமயத்திற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பே "ஆரியவர்த்தம்," அல்லது "பாரத வர்ஷம் என்று அழைக்கப்படுவது. மகாபாரதக் கதையில் ஆரியர்கள் நடத்திய உள்நாட்டுச் சண்டைகள் விவரித்துக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் இராமாயணக் கதையில் ஆரியர்களின் தென்னாட்டுப் படையெடுப்பு விவரிக்கப்படுகிறது. ஆரிய வாடை விந்தியத்தைக் கடந்து தென்னகத்திலும் வீசத் தலைப்படுகிறது. அயோத்தியின் தலைவனான இராமன் தென்னகத்தின் தலைவனாக மாற்றப்படுகிறான்.

"இந்தியாவின் கண்டுபிடிப்பு" என்ற நூலில் பண்டிதநேரு இவ்வாறு குறிப்பிடுகிறார் : (பக்கம்-89)

"மகாபாரதக் கதையில், ஆரியர்களின் அடிப்படை ஒற்றுமை வலியுறுத்தப்படுகிறது. இந்தியா, பாரதவர்ஷா, ஆரியவர்த்தம் என்று அழைக்கப்படுவதெல்லாம் விந்தியத்திற்கும், இமயத்திற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பையேயாகும். அந்தச் சூழ்நிலைகள், ஆரியர்கள் விந்தியத்தைக் கடந்து தென்பாகத்திற்கு வரமுடியவில்லை. இராமாயணம், ஆரியர்களின் தென்னாட்டுப் படையெடுப்பைக் குறிக்கும் கதையாகும்..."

இராமர் தென்னாடு வந்த காலத்தில் இலங்கையின் ஒப்பற்றத் தலைவனாக விளங்கியவன் இராவணன்-முறுக்கு மீசையும், அரிமா நோக்கும் கொண்டவன்-யாழ்க்கலைஞன். ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்தோன் !

இமயமலை வட்டாரத்தைச்சார்ந்த ஆரியர்களின் தலைவனான இராமன் திராவிட மன்னன் இராவணனை எதிர்த்தான். ஆரிய மாயையில் திராவிட மன்னர்களில் சிலர் சிக்கினார்கள் ! மதுக் கலயத்தில் விழுந்த ஈ போலானார்கள். இறுதியில் எங்கள் குல திலகத்தை சூழ்ச்சியால் போரில் கொன்றார்கள். இதுதான் இராமாயணக் கதை.

பண்டித நேரு கூறுவதை படியுங்கள்:—"இராமாயணக் கதை, உண்மையாக ஆரியர்கட்கும், தென்னகத்தில் வாழ்ந்த மக்களுக்கும் நடந்த போராட்டமாகும். தென்னகத்து மக்களின் தலைவனாக விளங்கியவன் இராவணன்..."

ஆனால் அவரே இன்னொரு இடத்தில் கூறுகிறார்:—

"ஆரியர்கள் விந்தியம்வரை வேகமாக பரவினார்கள். ஆனால் பல காலம் முயன்றும் விந்தியத்தைக் கடந்து தென்னகத்தில் நுழைய முடியவில்லை. அடர்த்தியான காடுகள் நிறைந்து, புதர்கள் மண்டிக் கிடந்ததே இதற்குக் காரணம். ஆனால் ஆரியர்கள், கூட்டம் கூட்டமாக தொல்லைகள் பலவற்றிற்கும் ஆளாகி, விந்தியத்தைக் கடந்தார்கள். பெருங் கூட்டமாக அவர்கள் செல்ல முடியவில்லை, ஆகையால் தென்னகத்தில் வாழ்ந்த மக்கள் திராவிடர்களாகவே வாழ்ந்தார்கள்."

இதிலிருந்து இராமாயணம், ஆரியர்களுக்கும், திராவிடர்களுக்கும் நடந்த போராட்டம் என்பது தெளிவாகின்றது. தனித் தன்மையோடு நாடாண்ட இனம், ஆரியத்திற்கு அடிபணிந்தது என்று கூறும் காவியம் நமக்குத் தேவையா ?...

சோசப் டி. சிப்லி. என்பான்தான் பதிப்பித்த "இலக்கியக் கலைக்களஞ்சியத்தில்" இவ்வாறு கூறுகிறார்.—(பக்கம் 447-448 புத்தகம்-1)

"இராமன் அயோத்தியிலிருந்து புறப்பட்டதும், இராமாயணக் கதைக்கு ஒரு புதிய திருப்பம் ஏற்படுகிறது. அதற்குப் பின்னால் உள்ள கதை, பழங் கால இந்தியச் சரித்திரத்தின் ஒரு முக்கியமான நிகழ்ச்சியாக அமைந்திருக்கிறது. அது ஆரியர்களின் தென்னாட்டுப் படையெடுப்பே ஆகும். அயோத்தியின் பட்டத்தரசனான இராமன், அந்தப் பெரிய படையெடுப்பின், வீரமுள்ள தலைவனாக மாற்றப்படுகிறான்..."

"அகத்திய முனிவன் ஒரு கூட்டத்தை அழைத்துக்கொண்டு விந்தியத்திற்குத் தெற்கே புகுந்தான். ஆனால் போதிய படை வசதியில்லாத காரணத்தினால், அவனுடைய முயற்சி தோல்வியடைந்தது. அயோத்தியிலிருந்து துரத்தப்பட்ட இளவரசனான இராமன் அந்தக் குறையைத் தீர்த்தான். இதுதான் இராமாயண காவியத்தில் குறிக்கப்பட்டிருக்கிறது. அவன் தென்னகத்தில் வாழ்ந்த பல அரக்கர்களைக் கொன்று குவித்தான். முனிவர்கள் வடக்கே இருந்து தெற்கே வர பாதை அமைத்தவன் இவனே. ஆரியம் தங்கு தடையின்றி தென்னகத்தில் பரவியது...".

வால்மீகி இராமாயணம் எழுந்தது தொல்காப்பியத்திற்கு பிற்பட்டக் காலத்திலாகும். தொல்காப்பியர் காலத்திலிருந்து ஏறக்குறைய ஆயிரத்தி இருநூறு வருடங்களாக இந்தக் கதை தமிழில் மொழி பெயர்க்கப்படாமல், போற்றுவதற்குரியதொரு நிலையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தது. இடைப்பட்டக் காலத்தில், நல்லிசைப் புலவர்கள் தமிழகத்தில் ஆயிரக் கணக்கில் இருந்திருக்கிறார்கள். அவர்களில் ஒருவராவது இந்தக் கதையை தமிழ்ப்படுத்த முயற்சிக்கவில்லை ! அவ்வாறு செய்வது தம் புலமைக்கே இழுக்கு என்று அவர்கள் கருதினார்கள். யாருக்கும் தாழ்ந்துவிடாமல், யாருக்கும் தாள் பணியாமல், யாரையும் தாழ்த்தாமல் வாழ்ந்த திராவிட இனத்தை தாழ்த்தியும், தாள்பணிய வைத்தும், புனையப்பட்டிருக்கும்வடமொழிக் காவியத்தைக் கண்டு. சோகப் புயலானார்கள்; வேதனைக் களமானார்கள். ஆனால் இற்றைக்கு சுமார் எழுநூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த கம்பன் என்பான் வடமொழி இராமாயணத்திற்கு, தமிழ் வடிவம் கொடுத்தான் ! இனத் துரோகம் செய்தான் ! இழிச் செயல் புரிந்துவிட்டான் !

கம்பனுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்த "பெருந்தேவனார்" என்பாரால் வடமொழியிலிருந்துமொழி பெயர்க்கப்பட்ட "பாரதக் கதை" அழிந்துவிட்டது. அதேபோல் கம்பனது இராமாயணமும், பிற்காலப் புலவர்களால் புகழ்வதற்குரிய நிலையிலிருந்து தள்ளிவைக்கப்பட்டது.

நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும் !
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை !

விந்தை மனிதர்

எழுதியவர் : நா. ஜகந்நாதன், எம். ஏ.

சமூக சேவை', சமூக சேவை என்று சாதாரண மக்கள் ஓலமிடுவதைவிட, படித்துப் பட்டம் பெற்றவர்கள், அதையே தன் இலட்சியமாகக் கொண்டு, பிறரையும் வாழவைத்து, தாமும் வாழ நினைத்தால், நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும். இன்றைப் பட்டதாரிகளின் நிலை அப்படியல்ல; பிறந்தோம் தன் வாழ்வை வளப்படுத்திக்கொள்ளப் படித்தோம், பணம் திரட்டினோம், உல்லாச வாழ்க்கை வாழ்ந்தோம், செத்தோம், என்ற அளவில் தானிருக்கிறது.

ஒவ்வொரு பட்டதாரியும் கட்டாயம் சமூக சேவை செய்ய வேண்டும் என்று சட்டமியற்றுவதைவிட, பட்டப்படிப்பு படிக்க விரும்பும்பொழுதே, 'சமூக சேவை' என்ற இலட்சியம் அவர்கள் ரத்தத்துடன் சேர்ந்து ஊறவேண்டும். இதைத்தான் நாவல் ஆசிரியரும் வலியுறுத்திக் கூறுகிருர்.

''டாக்டர் தொழில் ஒன்றில் தான், ஊழல் இன்றி பொது மக்களுக்குச் சேவை புரிந்து கொண்டே சம்பாதிக்க முடியும் என்று முடிவுசெய்து, டாக்டர் பட்டம்பெற்று, காதலில் தோல்வி கண்டு, செல்வத்தை இழந்து, விதவையாகி, தன் இலட்சியத்தில் வெற்றிகண்ட ஹேமலதா !

''சமூக சேவையம். சமூக சேவை, பெண்களுக்குச் சமூக சேவை என்ன வேண்டியிருக்கிறது ? சேவை என்று சொல்லிக் கொண்டு வயதுவந்த பையன் சுகுமாருடன் சுற்றித்திரிந்தால் சமூகம் என்ன நினைக்கும். என்று அங்கலாய்த்து, இடையூறுகள் பல செய்யத் திட்டம் தீட்டி தோல்வி கண்ட ஹேமாவின் தந்தை ரெங்கநாத முதலியார் !''

''டாக்டர் பட்டம் பெற்று ஹேமாவின் காதலை இழந்து, பல இன்னல்கள் அடைந்து, சிறைசென்று மக்கள் நலமே, தன் நலமென கருதி, உழைத்து தன் இலட்சியத்தில் வெற்றி கண்ட சுகுமார் !

''தன் மகன் படித்துப் பெரிய டாக்டராகி பேரும் புகழும் பெற்று, நாமும், சுற்றமும் வாழ வேண்டும் என்று நினைத்த சுயநலக்கார சுந்தரமூர்த்தி !''

''ஹேமலதா ! உன் காதலன் இனி என் கணவன் !''

என் தந்தை இனி உன் காதலன் !

எனக்கு அன்று நீ சிநேகிதை !

இனிமேல் எனக்கு நீ சிற்றன்னை ! என்று எக்காளமிட்டு, சுகுமார் காதலுக்காக ஏங்கித் தவித்த சூழ்ச்சிக்கார வில்லி பிரேமா !

''ஐம்பதாவது வயதில் ஹேமா என்ற அழகியை, பட்டம் பெற்றவளை தன் மனைவியாக அடைந்தோம் என்று இறுமாப்படைந்து, பின் மனம் மாறி இளம்பெண்களின் வாழ்வைக் கெடுக்க விரும்பாத, மனநோயால் சூன்பப்பட்டு இறந்த பிரிதாபத்திற்குரிய பிரேமாவின் தந்தை குஞ்சிதபாதம் !

காதலியாகயிருந்து, சகோதரியாக மாறி, விதவையான ஹேமா! காதலைப்பெற முயன்று, தோல்வி கண்டு, சேவையே வாழ்வு என மதித்த கன்னிப் பெண் பிரேமா ! காதலைவிட இலட்சியமே பெரிதென எண்ணி இலட்சியத்தில் வெற்றி கண்ட சுகுமார்-மூவரும் சேர்ந்து தொண்டு புரிகின்றனர். சகோதர,சகோதரிகளைப்போல் நினைத்துச் சரளமாகப் பழகிச் சேவை செய்கின்றனர். மூன்றுபேரும் விந்தை மனிதர்களாகத்தோன்றுகின்றனர்.

புத்தகத்தை வாங்கிப் படியுங்கள். அவர்களே உங்களிடம் நேரில் பேசுவார்கள். அவர்கள் இலட்சியங்களை விளக்குவார்கள். பிறகு தீர்ப்புக் கூறுங்கள். அவர்கள் விந்தை மனிதர்களா? இல்லையா என்று ?

மு. வரதராசனுர் கருத்துரையுடன் அமைந்த இந்த புத்தகத்தின் விலை ரூ. 2-50.

வெளியிட்டவர்கள் :

மலர் நிலையம்,
133. பிராட்வே சென்னை-1.

''மாவண்ணு''

கம்பன் தீராத பழியைச் சுமக்க வேண்டியவனுனன்.

பேராசிரியர். மறைமலையடிகள், ''முற்கால பிற்காலத் தமிழப்புலவர்கள்'' என்ற நூலில் கூறுவதைப் படியுங்கள் :

''இப்பாரதக் கதையினும், பொய்ம்மை நிறைந்ததாய் இருத்தல் பற்றி வடமொழியிலுள்ள இராமாயணக் கதையைப் பண்டையாசிரியர் எவரும் தமிழில் மொழிபெயர்த்துச் செய்திலர். இற்றைக்கு எழுநூறு வருடங்களுக்கு முன்னிருந்த கம்பரென்னும் புலவரால் பாடப்பட்ட இராமாயணம் வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணத்தைப் பற்றிச் செய்யப்பட்டதாயினும், அதனினும் பார்க்க பொய்மை நிறைந்ததாய் பழைய தமிழாசிரியர் கைக்கொண்ட இயற்கை வாழ்க்கையோடு, மாறுபட்டதாய் தோன்றியமையின், அக்கம்பர்க்குப் பிற்பட்டிருந்த சிறந்த உரையாசிரியர்களாலும், அஃது ஏற்றுக் கொள்ளப்படாததாயிற்று.''

கடைசியாக, ''பாரதிதாசனுர்'' வாழ்த்தோடும், வணக்கத்தோடும், கட்டுரையை முடிப்போம்.''

''தென்திசையைப்
பார்க்கின்றேன் என்சொல்வேன்

எந்தன் சிந்தையெலாம்,
தோள்களெலாம் பூரிக்குதடா,

அன்றந்த இலங்கையினை
யாண்ட மறத்தமிழன் !

ஐயிரண்டு திசைமுகத்தும்
தன்புகழை வைத்தோன் !

குன்றெடுக்கும் பெருந்தோளான்!
கொடைகொடுக்கும் கையான் !

குள்ளநரிச்செயல் செய்யும்
கூட்டத்தின்-கூற்றம் !

என்தமிழர் மூதாதை,
என்தமிழர் பெருமான் !

இராவணன் காண் !
அவன் நாமம் வாழ்க!''

—சிவம், பி. எஸ்.சி.

கோவை வட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்ற மன்றம்

★

20-7-58 ஞாயிறு காலை 10 மணிக்கு கோவை நகர திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிடத்தில் கோவை வட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்ற மன்ற அமைப்புக் கூட்டம் **எஸ். ஏ. இராசமாணிக்கம்** தலைமையில் நடைபெற்றது. நகர தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கள்-வட்டாரக் கழகச் செயலாளர்கள்-வட்டக் கழகச் செயலாளர்கள்-பல்வேறு வகைத் தொழில் பிரதிநிதிகள் ஆகியவர்களாக நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். மன்ற அமைப்பு பற்றி பரிசிலித்து. கீழ்கண்ட முடிவுகள் செய்யப்பட்டன.

அமைப்பின் பெயர் :

கோவை வட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்ற மன்றம்.

நிர்வாகிகள் :

தலைவர் : கோவை செழியன்.

துணைத் தலைவர்கள் : மு. இராமனுதன், இரா. சுந்தரம்.

செயலாளர்கள் : க. கோபால், அ. காந்தி.

துணைச் செயலாளர் : எஸ். பி. இராசு.

பொருளாளர் : அய்யாசாமி.

செயற்குழு உறுப்பினர்கள் :—

வர்த்தக குமாஸ்தாக்கள் : எஸ் ஏ. இராசமாணிக்கம், சா. மு. சுப்பிரமணியம்.

நெசவாளர்கள் : நடராசு, திராவிடமணி.

இஞ்ஜினியரிங் தொழில் : மதிவாணன், சுப்ரி, ஆறுமுகம்.

ஆட்டோரிக்சா தொழில் : சி. எஸ். ஆர். மாணிக்கம், சவுரிநாயகம்.

மின்சார இலாகா : ரா. வே. சிரி, எழினி.

அச்சகத் தொழில் : ரெங்கராசு, நெல்லையப்பன்.

பஞ்சாலை குமாஸ்தாக்கள்: பொன்னுசாமி, இராமகிருஷ்ணன்.

கலாசுத் தொழில் : ப. ஆறுமுகம், எம் ஏ. மஜீத்.

விவசாயம் : ஆர். கே. சடையப்பன், தம்பிசிரவை.

பஞ்சாலைத் தொழில் : பழனிசாமி, பாண்டி இராமசாமி, கிருஷ்ணன், தேவராசு, கூத்தரசன், ஜெயராமன்.

வெண்பாப் போட்டி-24.

ஈற்றடி :

கோவலர்வாய் வைத்த குழல்

முடிவு தேதி 23-8-58.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை - 6.

— 1ம் பக்கத் தொடர்ச்சி —

பாதையில்தான் போலந்தும், ஹங்கேரியும் சென்றன.

1948-53 ஆண்டுகளில் கிரெம்ளினின் கொள்கை கிழக்கு ஐரோப்பாவை ரஷ்யமயமாக்குவதாக இருந்தது. தேசீய உரிமைகள் மிருகத்தனமாக நசுக்கப்பட்டன. இதற்குத் துணையாக மார்க்சின் தத்துவங்கள் எடுத்துப் பேசப்பட்டன.

சமுதாயத்தில் முதலாளி-தொழிலாளி என்ற இரு பிரிவைத்தான் மார்க்ஸ் கண்டான். இரண்டுக்குமிடையே உள்ள மத்திய தர வகுப்பைப்பற்றி அவன் கவலைப்படவில்லை. இதனால் ஏற்பட்ட கோளாறு அவன் திட்டத்திலேயே ஒரு கோணலை ஏற்படுத்திவிட்டது. "உலகத் தொழிலாளர்களே, ஒன்றுபடுங்கள்" என்று சொன்னபோது மார்க்ஸ் தேசிய உணர்ச்சியை குறைத்தோ அல்லது தவறுகவோ மதிப்பிட்டுவிட்டான்.

தொழிலாளிக்கு நாடில்லை; தேசியப் பிரிவில்லை; முதலாளித்துவம் ஒழிக்கப்பட்டால் தேசியப் பிரிவுகள் வலிவிழந்து மறைந்துவிடும்; என்றெல்லாம் எழுதிச் சென்றான் மார்க்ஸ்.

மார்க்ஸ் சொன்னதை பின்னால் வந்த ஸ்டாலின் அழுத்திச் சொன்னான். நிலப் பிரபுத்துவம் அழிந்து முதலாளித்துவம் வளரும்போது தேசிய அரசுகள் பிறக்கின்றன; பொதுஉடமை வந்தால் தேசியப் பிரிவுகள் இல்லாமலாகிவிடும்; என்றான் ஸ்டாலின்.

ஆனால் இன்று இவர்களின் 'தூரதிருஷ்டி' பொய்த்துவிட்டது. தொழிலாளிக்கும் நாட்டுப்பற்று உண்டு; பொதுஉடமையைவிட தேசீயம் வலிமை வாய்ந்தது என்ற உண்மை இன்று பளிச்சிடுகிறது. வர்க்கஉணர்ச்சி தேசிய உணர்ச்சியை அழித்துவிடமுடியாது என்று பிரெடரிக் லிஸ்ட், எட்வர்ட் பெர்ன்ஸ்டீன், போன்ற சிந்தனையாளர்கள் கூறி வந்தது இன்று நடைமுறையில் நிரூபிக்கப்பட்டு வருகிறது.

1956-ம் ஆண்டு அக்டோபரில் போலந்தில் ரஷ்யாவுக்கு எதிராக புரட்சி ஏற்பட்டது. ரஷ்யாவைச் சேர்ந்த ரோகோஷாவ்ஸ்கி ஆட்சி பீடத்திலிருந்து அகற்றப்பட்டு கோமுல்காவிடம அதிகாரம் ஒப்படைக்கப்பட்டது. தேசிய எழுச்சியை அடக்க முயன்ற ரஷ்யா தோல்வி கண்ட பிறகு பின் வாங்கியது.

ஹங்கேரியில் நிகழ்ந்த மக்கள் எழுச்சியும் ஒரு தேசீயப்போராட்டமே! ஹங்கேரி மக்கள் உலகப் பெரும் போருக்கு முன்பிருந்த அரசியல் அமைப்பை விரும்பி இப்புரட்சியை நடத்தவில்லை. அவர்கள் ரஷ்யாவோடு நேசமாக, பொதுஉடமை நாடாகத்தான் இருக்க விரும்பினர். ஆனால் அதே நேரத்தில் தங்கள் நாட்டின் தேசியப் பொலிவை மாஸ்கோவின் காலடியில் சமர்ப்பிக்க விரும்பவில்லை.

ஸ்டாலின் மரணத்துக்குப் பிறகு பெல்கிரேடில் நடைபெற்ற குருஷ்சேவின் பிரசித்திபெற்ற "பாபமன்னிப்பு" பிரசங்கத்தைக் கேட்டபிறகு உலகம் நினைத்தது, ரஷ்யா தேசிய உரிமைக்கு மதிப்பளிக்கத் தொடங்கிவிட்டது என்று. ஆனால் ஹங்கேரியில் வழிந்தோடிய ரத்த வெள்ளமும், நாகி தூக்கில் தொங்கவிடப்பட்டதும், ரஷ்யாவின் உண்மை சொருபத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டிவிட்டன. ஸ்டாலினிடம் இருந்த பெருந்தன்மைகூட குருஷ்சேவிடம் இல்லை!

ரஷ்ய ஆதிக்கத்தை எதிர்த்து யூகோஸ்லோவியாவிற்கு ஒரு புதுவாழ்வு தந்த தலைவன் டிட்டோ. தேசிய சுதந்திரம், மார்க்சிய அடிப்படையில் சமுதாய சீரமைப்பு—இதுவே டிட்டோவின் திட்டம்!

யூகோ மக்கள், மற்ற எந்த தத்துவங்களையும் விட தேசிய சுதந்திரத்தை பெரிதென மதிக்கின்றனர். இந்த உணர்வே 1948-ல் ஸ்டாலினை திக்குமுக்காடச் செய்தது. ஸ்டாலின் தோற்ற இடத்தில் குருஷ்சேவ் வெற்றிபெற முயன்றார். தோல்வியே கண்ட பலன். தேசிய உரிமையை விட்டுக்கொடுக்க பொதுஉடமையை போதுமான காரணமாக யூகோ மக்கள் கருதவில்லை!

யூகோ மக்களுக்கு, குருஷ்சேவ் வேண்டுமானால் நண்பராக இருக்கலாம். ஆனால் டிட்டோ தான் அவர்களுக்கு தலைவன்!

யூகோஸ்லோவியா ஒருடிட்டோவைப் பெற்றதுபோல, எகிப்து ஒரு நாசரைப் பெற்றது. பிரிட்டிஷ் பிரெஞ்சு ஏகாதிபத்தியங்களை எதிர்த்து, அரபு நாடுகளின் தேசிய உரிமையை முதன்முதல் நிலைநாட்டிய பெருமை நாசரையே சாரும்.

நீண்ட காலமாகவே மேற்கத்திய நாடுகளின் போக பூமியாக விளங்கிய மத்தியகிழக்குப் பகுதியில் முதல் சுதந்திரக் கொடியைப் பறக்கவிட்டது எகிப்து. கேளிக்கையே வாழ்வெனக் கொண்டிருந்த பரூக் மன்னன் விரட்டியடிக்கப்பட்டதும், நாசரின் தலைமையில் புதிய எகிப்து மலர்ந்ததும், சூயஸ் கால்வாய் தேசிய மயமாக்கப்பட்டதும், பிரிட்டனும், பிரான்சும் படையெடுத்து முகத்தில் கரிபூசிக் கொண்டபின் பின்வாங்கியதும் உலகம் நன்கறிந்த சேதிகளாகும்! நாசர் பெற்ற மகத்தான வெற்றி மற்ற அரபு நாடுகளின் தேசிய எழுச்சிக்கு தெம்பூட்டியது. அதன் விளைவுதான் இன்று மேற்கு ஆசியா குமுறலும் கொந்தளிப்புமாக இருக்கிறது.

டிட்டோவின் வெற்றி ஏகாதிபத்தியத்திற்கு வீழ்ச்சி!

சமீபத்தில் ஈராக்கில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் திடீரென்று ஒருநாளில் உருவானதல்ல. நெடுநாட்களாகவே வளர்ந்துவந்த ஒரு வேகந்தான் இன்று உச்சநிலையைத் தொட்டிருக்கிறது!

முதல் உலகப் பெரும்போருக்கு முன்பு அரபு நாடுகள் ஆட்டமன் சாம்ராஜ்யத்தில் சிக்கிக்கிடந்தன. ஆனால் சுதந்திரத்தை விரும்பும் இனத்தவரான அராபியர்கள் விரைவிலேயே ஆட்டமன் சாம்ராஜ்யத்தை உடைத்தெறிந்தனர். எனினும் விடுபட்ட அரபு நாடுகளை அமெரிக்க-ஆங்கில முதலீடும் அரசியல் சூழ்ச்சியும் விலங்கிட்டு வைத்தன!

கடைசியில் நாசர் எகிப்தில் ஒரு புதிய பொலிவை உண்டாக்கியபோது மற்ற அரபு நாடுகளிலும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. அரபு நாடுகளின் தேசிய எழுச்சி தன்னுடைய நியாயமான அந்தஸ்தைப் பெற ஆரம்பித்துவிட்டது!

'செல்வம் கொழிக்கும் பூமி' என்பதற்கு முழுக்க முழுக்க இலக்கணமாகத் திகழும் நாடு ஈராக். எண்ணெய்ச் செல்வம் நிறைந்த நாடு. பைபிளில் விவரிக்கப்படும் ஏடென் தோட்டம் படுத்துக் கிடக்கும் நாடு. ஆறாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சுமேரியர்கள் முதல் சொல்லையும் எழுத்தையும் தந்து சென்ற நாடு.

இத்தகைய நாட்டில் படித்த அராபியர்களுக்கு வேலையில்லை; ஜனநாயக உரிமைகளை மறுக்கும் முடியரசு. மேற்கு நாடுகளின் அரசியல் தலையீடு. தேசியப் போராட்டம் எழ இதைவிட வேறென்ன சூழ்நிலை வேண்டும்?

இன்று ஈராக்கின் வீதிகளில் "நாசர் வாழ்க" என்ற முழக்கம் கேட்கிறது. இது சாதாரண வாழ்த்தொலி அல்ல. இதற்கு ஒரு தனி அர்த்தமிருக்கிறது. இன்று நாசர் எகிப்தின் தலைவன் மட்டுமல்ல; அரபு நாடுகளின் தேசிய உரிமைகளுக்கு ஒரு வடிவம் கொடுக்கும் "சரித்திர புருஷன்!"

டிட்டோவும், நாசரும் இன்று நிலைநாட்டியிருப்பது இதுதான்; தேசியத்தை எதிர்க்கும் எந்தத் தத்துவமும், எந்த சக்தியும் ஒரு நாள் வீழ்ச்சியுற்றே தீரும்! என்பதுதான் அது.

சர்வ தேசியம்கூட தேசிய உணர்வை அலட்சியப்படுத்திவிட்டு இயங்கமுடியாது. சாக்சேனா என்பார் எழுதுகிறார்—

"புதிய சர்வ தேசீயம் தேசியத்தை முழுதும் புறக்கணித்ததல்ல. அது தேசியத்தை வரலாற்றில் ஒரு வலிமை பொருந்திய சக்தியாக ஒப்புக்கொள்கிறது. பல்வேறு நாடுகளின் பல்வேறு தேசியத் தன்மைகளை அடியோடு அழிக்க நினைக்காமல் ஒத்துப் போகச் செய்வதே பலனுள்ள பணியாகும். விளையாட்டுப் பந்தயங்களில்கூட ஒரு நாடு பெறும் வெற்றி அந்த நாட்டின் தேசியப் பெருமையை உயர்த்துவதாகக் கருதப்படுகிறது."

ஐ. நா. சபை, ஐரோப்பியபாதுகாப்பு அமைப்புபோன்ற அகில உலக அரசியல் அமைப்புகள் தோல்வியுறுவதன் ரகசியம் அவை தேசிய உணர்ச்சிக்கு எதிராக இயங்குகின்றன என்பதுதான். ஆனால் அகில உலக பொருளாதார அமைப்புகள் தேசிய தனித்தன்மைகளை ஒப்புக்கொள்வதால் சாகாமல் இயங்குகின்றன.

பெரும் பெரும் வல்லரசுகளை எதிர்த்து நிற்குமளவிற்கு, இன்று தேசிய உணர்ச்சி வலுப்பெற்றிருக்கிறது. பெரிய பெரிய நாடுகள்தான் வரலாற்றை சிருஷ்டிக்கின்றன என்பதில்லை. சின்னஞ்சிறு நாடுகள்கூட சரித்திரத்தை எழுதுகின்றன. ஆம்! டிட்டோவும், நாசரும் புதிய வரலாற்றின் சிருஷ்டிகர்த்தாக்கள்! தேசியத் தத்துவத்தின் தனிப்பெரும் சின்னங்கள்!

அற்பத்தனமான ஆசைகளுக்காக நாட்டின் சுதந்திரத்தை விலை பேசுபவர்கள், திராவிட தேசிய எழுச்சியை அடக்க நினைப்பது பேதமையிலும் பேதமை! டிட்டோவிடமும், நாசரிடமும் அவர்கள் படிப்பினை தெரிந்துகொள்ள மறுப்பார்களானால் அதன் விளைவுகளைத் தாங்கிக்கொள்ள தயார் செய்துகொள்ளட்டும்! ★



★
எங்கும் கிடைக்கும்.

வெண்பாப் போட்டி

23. கண்டபயன் ஒன்றில்லை காண்.

விண்ணில் ஒளிதேக்கும் வீதியெலாம் பால்தெளிக்கும்
கன்னல் மொழிபேசிக் காதலர்கள் — ஒன்றிப்பின்
இன்னபிற செய்வதுகண் டேக்கமுறும் வெண்மதிதான்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—"கடைச்சாமி", முதுகுளத்தூர்.

❁

நீர்என்றார், நாட்டில் நிலமென்றார், பாரதத்தைப்
பார்என்றார், பாரில் புகழென்றார்—பார்க்குங்கால்!
பண்பின் செயலில்லை, பாடக் குரலில்லை
கண்டபயன் ஒன்றில்லை காண்!

—செ. வெற்றிமன்னன், நாமக்கல்.

❁

அன்பே உனைநான் அடைந்ததொரு நாள்முதலாய்
இன்பம் பலவாக ஏற்றமுற்றேன்—தேன்பால்கற்
கண்டும் கலந்த கனிமொழியே உன்னால்நான்
கண்டபயன் ஒன்றில்லை காண்!

—சோம. திருநாவுக்கரசு, மதுரை.

❁

பாரதம் பெற்றுவிட்டால் பாலையிலும் பொன்விளையும்
தீராத துன்பமெலாம் தீய்ந்தொழியும்—பாரெனவே
விண்டார்கள் ஆளவந்தோர் ஈரைந்தும் ஆண்டாச்சே
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—மே. மு. அபூபக்கர், வாணியம்பாடி.

❁

தென்றல் குளிர்ந்தென்ன தேன்நிலவும் காய்ந்தென்ன
குன்றாப் பெருஞ்செல்வம் கொண்டென்ன—அன்பே! நாம்
இன்பமுற ஓர்குழந்தை இல்லை எனில்வாழ்வில்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—முசுமன், கோவை.

❁

ஆண்டு பலவாக ஆண்டார் வடவரே
ஈண்டியாம் கண்டதுதான் என்கொலோ?—மூண்டதே
மண்டுபிணி நீள்வறுமை வற்கடமே இஃதன்றி
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

❁

ஆசை தணிப்பதற்கோ ஆடை அணிகளில்லை;
மீசை உனக்கெதற்கு மாமா? வீண்—ஆசையால்
பெண்டாட்டி ஆகிநான் பிள்ளையரைப் பெற்றதன்றிக்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—சந்திரமதி, கருப்பட்டிபாளையம்.

❁

எத்தனைநாள் நோன்பிருந்தேன் ஏதும் பயனில்லை
சொத்தனைத்தும் வீணாக்கிப் பித்தானேன்—முத்தம்மா!
கண்ணான நற்குழவி கொடுக்காத உன்னாலே
கண்டபயன் ஒன்றில்லை காண்!

—அ. சு. முருகேசன், மேலைச்சிவபுரி.

❁

வரையிலா இன்பொருட்கள் வாரிக் கொணர
கரைகாணா சீமைக்கே சென்றான்—குறைவின்றி
கொண்டோன் வரவுக்குக் கோலநிலா காத்திருந்தும்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—தே. செல்வராசு, க. வெள்ளாகுளம்.

❁

திட்டம் பலகாட்டித் தீரரென மக்களிடைக்
கொட்ட மடித்துவரும் காங்கிரசே—எட்டிநில்!
தண்டச் செலவினால் தாழ்வுற்ற தென்னகத்தார்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—பசுமலைவீர. முருகேசன், மதுரை.

❁

கொட்டும் வரிப்பணத்தால் கூடி மகிழ்கின்றார்;
திட்டமெல்லாம் அங்கேதான்; தென்னாட்டை மட்டமதாய்
எண்ணிவிட்டார்; வேண்டாமே இவ்வாட்சி; நாமிதனால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—ப. குருதேவன், தேவதானப்பட்டி.

❁

கன்னித் தமிழ்நாட்டில் காங்கிரசார் ஆட்சியிலே
கண்ணீர்ப் புகைவீச்சும், கையூட்டும்—பெண்மயிலே!
குண்டாந் தடியடி, கொள்ளைச் செயல்தவிர
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—க. தங்கவேலன், சேர்வைநகர்.

❁

கண்ணாடிக் கன்னத்தாள் அண்டையில் வந்திட்டாள்,
கண்ணசைத்துப் பண்பாடிக் கையசைத்தாள்—பெண்ணாசை
கண்மறைக்கச் சென்றேனே காட்டுவழி, தூக்கத்தில்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—எஸ். நெடுமாறன், பருவக்குடி.

❁

பெண்டுக்குக் கல்வி பெருந்தீமை யென்பார்கா
துண்டிப்பாய்; அஞ்சாய் துணிவாய்நீ—தண்டமிழ்க்
கண்டமுதை மாதர்க் களிக்காக் கொடுமையினால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—மு. முகம்மது அலி, காரைக்கால்.

❁

அல்லிக் குளத்தருகே அன்பே! நீ வா'வென்று
சொல்லி அழைத்தவர், ஏன் சொல்மறந்தார்?—வல்லி! நல்
இன்பம் தருநிலவும் இன்றென்னை வாட்டுதடி
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—க. இன்பவல்லி, சுந்தராபுரம்.

❁

பாழ்வயிற்றின் நோயாம் பசிதீர்க்க வேலைக்காய்
நாள்தோறும் சுற்றித்தான் நான்அலைந்தேன்—தோள்வாடி
கண்ணில் இருள்கப்பி, கால்கடுக்க மீண்டதல்லால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—'கவித்தங்கை', பெருமாள்வலசு.

❁

முப்பாலும், காப்பியமும், முத்தமிழ்ச்செய் யுள்நடையும்
தப்பாமல் கற்கத் தவறிட்டேன்—எப்பாலும்;
விண்ணுலகம் பற்றி விளம்பியுள்ள நூல்பயின்றேன்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—முகவை சிவ. சிவாநந்தன்.

❁

பஞ்சம் ஒழியவில்லை; பாழ்பசி ஓயவில்லை;
நெஞ்சுருகுந் தற்கொலைகள் நீங்கவில்லை;—கொஞ்சமில்லை
கண்ணீரின் காணிக்கை; மண்ணாளும் மாடுகளால்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—சா. கா. சாகுல் அமீது, சென்னை-21.

❁

வட்டமுகப் பொன்னிறத்தாள் வாவென்றாள்; ஏனென்றேன்?
கட்டிலினைக் காட்டினாள்; காலெடுத்தேன்;—தொட்டிழுக்கக்
கண்திறந்தேன்; ஏன்விழித்தேன்? ஐயோ கனவினிலும்
கண்டபயன் ஒன்றில்லை காண்.

—சிவஞானக்குமரன், பெருமாள்புரம்.

15உ வெளிவருகிறது!
முல்லை
(ஆகஸ்ட் இதழ்)
விலை அணா எட்டு.

ராஜா பார்லி பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
PRO: A. சங்குப்பிள்ளை, 115, திண்டுக்கல்ரோடு, மதுரை.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணாசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு